06.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ராமநாதபுரம் சேதுக்கரையில் எழில் கொஞ்சும் கடற்கரை



ராமநாதபுரம், :ராமநாதபுரம் சேதுக்கரை அருகே இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரை அமைந்துள்ளது. இங்கிருந்து மன்னார் வளைகுடா தீவுகளையும் ரசிக்கலாம்.சேதுக்கரையில் பிரசித்தி பெற்ற சேதுபந்தன ஜெயவீர ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இங்கு தமிழகம் மட்டுமின்றி வடமாநில பக்தர்கள் அதிகளவில் வருகின்றனர். அப்பகுதியில் கொட்டக்குடி ஆறு கலக்கும் முகத்துவாரம் உள்ளது. இது ஆஞ்சநேயர் கோயிலில் இருந்து 1.5 கி.மீ., ல் அமைந்துள்ளது.

இப்பகுதியில் மரங்கள் சூழ்ந்து எழில் கொஞ்சும் கடற்கரை இயற்கையாக அமைந்துள்ளது. படகுகள் விடுவதற்கும் சறுக்கு விளையாட்டுகளை நடத்தவும் இடவசதி உள்ளது. ஆங்காங்கே மணல் திட்டுகளும், திட்டு வளைவுகளும் காண்போரை மெய்மறக்க செய்கிறது. அருகிலேயே ஏராளமான தென்னை மரங்களும், சதுப்புநிலக்காடுகளும் காணப்படுகின்றன. இங்கிருந்து மன்னார் வளைகுடா தீவுகளின்

அழகுகளையும் ரசிக்க முடியும். தற்போது இப்பகுதிக்கு செல்வதற்கான பாதையில் சீமைக்கருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளன. இதனால் அப்பகுதிக்கு யாரும் செல்ல முடிவதில்லை. இக்கடற்கரையை சீரமைத்தால் அழகான சுற்றுலா பகுதியாக மாறும். இதன்மூலம் சுற்றுலா பயணிகளின் வருகை மேலும் அதிகரித்து அப்பகுதி வளர்ச்சி அடையும். மேலும் பழங்காலத்தில் இப்பகுதியில் துறைமுகம் இருந்திருக்கலாம் என, தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## வைகை அணை நீர்மட்டம் 50 அடியாக உயர்வு

ஆண்டிபட்டி: வைகை அணை நீர் மட்டம் 50 அடியை கடந்தது. வைகை அணையின் மொத்த உயரம் 71 அடி. கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பெய்த கோடை மழையால் அணைக்கு நீர் வரத்து ஏற்பட்டது. பெரியாறு அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீரில் குறிப்பிட்ட அளவு வைகை அணைக்கு வந்து சேர்ந்தது. இதனால் அணை நீர் மட்டம் கடந்த ஜூலை 13 ல் 50 அடியாக உயர்ந்தது.அதன்பிறகு மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், வைகை அணை நீர் மட்டம் கடந்த செப்., 27 ல் 40.68 அடியாக குறைந்தது. அக்டோபர் துவக்கத்தில் தொடர்ந்து பெய்த மழையால், போடி கொட்டக்குடி ஆறு, தேனி முல்லை ஆறு, வருஷநாடு வைகை ஆறுகளில் நீர்வரத்து ஏற்பட்டு வைகை அணை நீர்மட்டம் உயரத்துவங்கியது. பின்னர், அணை நீர் பாசனம் மற்றும் குடிநீருக்கு பயன்படுத்தப்பட்டதால் நீர் மட்டம் படிப்படியாக குறைந்து, இம்மாத துவக்கத்தில் 46 அடியானது. இந்நிலையில், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் நீர் வரத்து மீண்டும் அதிகரித்து, நேற்று காலை நீர் மட்டம் மீண்டும் 50 அடியாக உயர்ந்தது. கடந்த ஆண்டு இதே நாளில் அணை நீர் மட்டம் 54.49 அடியாக இருந்தது. நேற்று அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 852 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி- சேடபட்டி குடிநீருக்காக

வினாடிக்கு 60 கன அடிநீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் வரத்து இன்னும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

### மூன்று அணைகளில் இன்று தண்ணீர் திறப்பு

சென்னை,:திருநெல்வேலி மாவட்டத்தில், பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் உள்ளன. இவற்றிலிருந்து, பயிர் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடும்படி, விவசாயிகள் கோரிக்கை விடுத் தனர். அதை ஏற்று, மூன்று அணைகளில் இருந்தும், இன்று முதல் தண்ணீர் திறந்து விட, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதனால், திருநெல்வேலி மற்றும் துாத்துக்குடி மாவட்டங்களில் உள்ள, 86 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

### இன்றும் மழை உண்டு

சென்னை: 'வங்க கடலில் உருவாகியுள்ள, காற்று மேலடுக்கு சுழற்சி தீவிரமடைந்து வருவதால், தெற்கு மற்றும் வடக்கு மாவட்டங்களில், இன்று கனமழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.இது தொடர்பாக, மையத்தின் இயக்குனர் ரமணன் கூறியதாவது:அரபிக் கடலில் நிலை கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வு நிலை நீங்கி விட்டது. ஆனால், வங்கக் கடலின் தென்மேற்கு பகுதியில், நேற்று முன்தினம் உருவாகிய, காற்று மேலடுக்கு சுழற்சி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடைந்து வருகிறது. இதனால், தென் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யும்; வட மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யும். சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

### தொடர்மழை: அணைகளில் நீர் வரத்து அதிகரிப்பு

மதுரை,: மதுரை, தேனி திண்டுக்கல்லில் சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக மதுரை மாவட்டம் சிட்டம்பட்டியில் நேற்று முன்தினம் கக௨ மி.மீ., மழை பதிவானது.அணைகளின் நீர் வரத்துபெரியாறு அணையின் நீர் வரத்து 2517கன அடி. வெளியேற்றம் 511 கனஅடி. வைகை அணை 852. வெளியேற்றம் 50. மஞ்சளாறு அணை 472.64. வெளியேற்றம் 636. மருதாநதி அணை 196. வெளியேற்றம் 40. சோத்துப்பாறை அணை 135. வெளியேற்றம் 135. சண்முகாநதி 20 வெளியேற்றம் இல்லை. சாத்தையாறு அணை 10.80 வெளியேற்றம் இல்லை.

**விலை குறைந்தது மலை வாழைக்காய்**



தாண்டிக்குடி,:தாண்டிக்குடி மலைப்பகுதி யில் வரத்து அதிகரிப்பால் மலை வாழைக்காய் விலை சரிவடைந்துள்ளது.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் ஏராளமான ஏக்கர் பரப்பில் மலைவாழை பயிரிடப்பட்டுள்ளது. தாண்டிக்குடி கீழ்மலை மற்றும் சிறுமலையில் விளைச்சல் காணும் மருத்துவ குணம் கொண்ட மலை வாழை புவியியல் குறியீடு அந்தஸ்து பெற்றது. தொடர் மழையால் கடந்த சில வாரங்களாக மலை வாழை வரத்து அதிகரித்து உள்ளது.தரமான 400 காய்கள் கொண்ட ஒரு பொதி ரூ.4 ஆயிரம் வரை விலை கிடைத்தது. தற்போது ரூ.2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையே விலை போகிறது. அடுத்த ரகத்திற்கு ரூ.800 முதல் ஆயிரத்து 500 வரை விலை கிடைக்கிறது.

கமிஷன் கடை நடத்தும் மகேந்திரன் கூறியதாவது: மலைவாழைக்காய் போன்ற காய்கள் மைசூர், அட்டப்பாடி, ஜவ்வாதுமலை, திருப்பத்துார் பகுதிகளில் இருந்து வரத்து உள்ளது. இவற்றின் வரத்து அதிகரித்ததால் மலைவாழைக்காய்

விலை குறைந்துள்ளது. தற்போது பெய்யும் மழை, மலைப்பகுதியில் விளைச்சல் அதிகரித்துள்ளது காரணமாக உள்ளது, என்றார்.வியாபாரி பாண்டி கூறியதாவது: சென்னையில் கிலோ ரூ.நுாறுக்கு விற்ற நிலையில் தற்போது கிலோ ஐம்பது முதல் அறுபது வரை விலை போகிறது. தீபாவளி, தொடர்மழை, மலைவாழைக்காய் போன்ற தோற்றம் கொண்ட காய்களின் வரத்
தால் விலை குறைந்துள்ளது, என்றார்.-

## காவிரியில் வரத்து அதிகரிப்பு

ஒகேனக்கல் : காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இரண்டு நாட்களாக, காவிரியில் தமிழக எல்லையான, பிலிகுண்டலுவுக்கு வரும் தண்ணீரின் அளவு, வினாடிக்கு, 15 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.கர்நாடக அணைகளில் இருந்து, தமிழகத்திற்கு காவிரியில், தண்ணீர் திறந்து விடப்பட்டதால், நேற்று முன்தினம் இரவு முதல், பிலிகுண்டலுவுக்கு வரும் தண்ணீரின் அளவு, வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துஉள்ளது.இதன் காரணமாக, ஒகேனக்கல், அருவிக்கு செல்லும் நடை பாதையில், அரை அடி உயரத்துக்கு மேல் தண்ணீர் சென்றது.

## தீபாவளி இனிப்பு தயாரிப்பில் கவனம் உணவு பாதுகாப்பு துறை எச்சரிக்கை

'தீபாவளி இனிப்பு தயாரிப்பில், வருவாயை மட்டும் கருதாமல், மக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு தரமாக தயாரிக்க வேண்டும்' என, உணவு பாதுகாப்பு துறை எச்சரித்துள்ளது. இனிப்பு தயாரிப்பு மையங்களில் திடீர் ஆய்வையும் துவக்கியுள்ளது.தீபாவளி பண்டிகைக்கு, இன்னும், நான்கு நாட்களே உள்ளன. இனிப்பு, கார வகைகளுக்கு, 'ஆர்டர்'கள் குவிந்த நிலையில், அதற்கான தயாரிப்பில், ஓட்டல்கள், 'கேட்டரிங்' மையங்கள், சுவீட் கடைகள்
மும்முரம் காட்டி வருகின்றன. உணவு தயாரிப்பில் கவனம் குறைந்தால் சிக்கலாகும் என்பதால், 'தயாரிப்பு நிறுவனங்கள் எச்சரிக்கையோடு செயல்பட

வேண்டும்' என, உணவு பாதுகாப்பு துறை எச்சரித்துள்ளது; தமிழகம் முழுவதும், திடீர் ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. இதுகுறித்து, சென்னை மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர், லட்சுமி நாராயணன் கூறியதாவது:

* இனிப்பு, கார வகைகளை தயாரிக்க சுத்தமான தண்ணீர், எண்ணெய் பயன்படுத்த வேண்டும். ஏற்கனவே பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்தக் கூடாது. தயாரிக்கும் இடம் சுத்தமாக, காற்றோட்டமாக இருக்க வேண்டும்

* உணவுப் பொருட்களை கையாள்வோர் மருத்துவ சான்று பெற்றிருக்க வேண்டும். கையுறை, தொப்பி, முக கவசம் அணிய வேண்டும். இனிப்பு, கார வகைகளை, 'பேக்கிங்' செய்து விற்பனைக்கு அனுப்பும் போது, தயாரிப்பு தேதி, உபயோக காலம், 'பேட்ச்' எண் போன்ற தகவல்களுடன் கூடிய, 'லேபிள்' ஒட்ட வேண்டும* உணவு கழிவுகள், வீணாகும் இனிப்பு, கார வகைகளை குப்பை கூடையில் வைத்து, அப்புறப்படுத்த வேண்டும்; தயாரிக்கும் இடத்தில் தேக்கி வைக்கக் கூடாது. கரப்பான் பூச்சி, ஈ தொல்லை இல்லாதபடி, உணவுப்பொருட்களை மூடி வைக்க வேண்டும்* விற்பனை விவரங்கள் குறித்த பதிவேட்டை பராமரிக்க வேண்டும். வருவாயை மட்டும் கருதாமல், மக்கள் சுகாதாரத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என, அறிவுறுத்தியுள்ளோம்; விதிமுறைகளை பின்பற்றாவிட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

### காவிரியில் தண்ணீர் வரத்து அதிகரிப்புஒகேனக்கல் அருவியில் குளிக்க தடை

ஒகேனக்கல், :தொடர் மழை மற்றும் கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட நீரால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில், தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால், சுற்றுலா பயணி கள் குளிக்கவும், பரிசல் பயணத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இரண்டு நாட்களாக, காவிரியில் தமிழக எல்லையான, பிலிகுண்டலுவுக்கு வரும் தண்ணீரின் அளவு, வினாடிக்கு, 15 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு, காவிரியில், தண்ணீர் திறந்து விடப்பட்டதால், நேற்று முன்தினம் இரவு முதல்,

பிலிகுண்டலுவுக்கு வரும் தண்ணீரின் அளவு, வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.இதன் காரணமாக, ஒகேனக்கல், அருவிக்கு செல்லும் நடை பாதையில், அரை அடி உயரத்துக்கு மேல் தண்ணீர் சென்றது. சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி, நேற்று குளிக்க தடை விதிக்கப்பட்டது.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து 40 ஆயிரம் கனஅடியாக உயர்வு

மேட்டூர் : தமிழக கர்நாடக எல்லையில் பெய்து வரும் கனமழை காரணமாக, மேட்டூர் அணையின் நீர்வரத்து, 20,500 கனஅடியிலிருந்து 40 ஆயிரம் கனஅடியாக உயர்ந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70.96 அடியாகவும், நீர் இருப்பு 33.5 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 500 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

## இன்றும் மழை உண்டு

சென்னை: 'வங்க கடலில் உருவாகியுள்ள, காற்று மேலடுக்கு சுழற்சி தீவிரமடைந்து வருவதால், தெற்கு மற்றும் வடக்கு மாவட்டங்களில், இன்று கனமழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.இது தொடர்பாக, மையத்தின் இயக்குனர் ரமணன் கூறியதாவது:அரபிக் கடலில் நிலை கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வு நிலை நீங்கி விட்டது. ஆனால், வங்கக் கடலின் தென்மேற்கு பகுதியில், நேற்று முன்தினம் உருவாகிய, காற்று மேலடுக்கு சுழற்சி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடைந்து வருகிறது. இதனால், தென் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யும்; வட மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யும். சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

## 5,000 ஏக்கர் முருங்கை பாதிப்பு திண்டுக்கல் விவசாயிகள் கவலை



திண்டுக்கல்:திண்டுக்கல்லில் 5,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட முருங்கை மரங்கள், நோய் பாதிப்பால் பச்சையத்தை இழந்து வருகின்றன. இதனால் விளைச்சல் பெருமளவு பாதிக்கப்பட்டு உள்ளது.திண்டுக்கல்லில் 2 ஆயிரத்து 62 எக்டேரில் (5,155 ஏக்கர்) முருங்கை, செடிமுருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 6 மாதங்களாக முருங்கை வரத்து குறைந்து வருகிறது. இதற்கு முருங்கை மரங்களை தாக்கும் சாம்பல் வண்டு, இலை பிணக்குப் புழுக்கள்தான் காரணம் என தெரிந்துள்ளது.தாக்குதல் அறிகுறிகள்: முருங்கை மரங்களின் இலைகளில், இலை பிணக்குப்புழுக்கள் பச்சையத்தை சுரண்டி உண்டு விடும். இதனால் இலைகள் சல்லடை போன்றும், பழுத்து மஞ்சளாகவும் மாறி உதிர்ந்துவிடும். மரத்தில் புழுக்கள் தொங்கும். நோய் தாக்குதலால், முருங்கை விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

வேடசந்துார் விவசாயி பாலசுப்ரமணி கூறியதாவது: ஆறு ஏக்கரில் 600 மரங்கள் பயிரிட்டுள்ளேன். ஒவ்வொரு மரத்திற்கும் சராசரியாக 40 கிலோ காய் கிடைக்கும். கிலோ ரூ.60க்கு விற்பனையானது. இந்த 'சீசனில்' 24 ஆயிரம் கிலோ விளைச்சல் பாதித்து, ரூ.9.60 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நோய் தாக்குதலால் மரங்கள் எலும்புக்கூடாக உள்ளன என்றார்.

இதுகுறித்து காந்தி கிராம வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறியதாவது:முருங்கை மரத்தை சுற்றி உழவு செய்து, மண்ணில் மாலத்தியான் துாள் மருந்தை, மரம் ஒன்றுக்கு 200 கிராம் துாவி நீர் பாய்ச்ச

வேண்டும். இதனால் மண்ணில் உள்ள கூட்டுப் புழுக்களை கட்டுப்படுத்தலாம். மாலத்தியான் திரவத்தை ஒரு லிட்டருக்கு 3 மி.லி., என்ற அளவில் கலந்து தெளித்தால், சாம்பல் வண்டை கட்டுப்படுத்தலாம் என்றார்.

## தொடர்மழை: அணைகளில் நீர் வரத்து அதிகரிப்பு

மதுரை,: மதுரை, தேனி திண்டுக்கல்லில் சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக மதுரை மாவட்டம் சிட்டம்பட்டியில் நேற்று முன்தினம் ககஉ மி.மீ., மழை பதிவானது.அணைகளின் நீர் வரத்துபெரியாறு அணையின் நீர் வரத்து 2517கன அடி. வெளியேற்றம் 511 கனஅடி. வைகை அணை 852. வெளியேற்றம் 50. மஞ்சளாறு அணை 472.64. வெளியேற்றம் 636. மருதாநதி அணை 196. வெளியேற்றம் 40. சோத்துப்பாறை அணை 135. வெளியேற்றம் 135. சண்முகாநதி 20 வெளியேற்றம் இல்லை. சாத்தையாறு அணை 10.80 வெளியேற்றம் இல்லை.

## பருவமழையால் விளைநிலம் குளிர்ந்தது!மகிழ்ச்சியில் திளைக்கும் விவசாயிகள்

உடுமலை: உடுமலை பகுதியில், தாமதமாக துவங்கிய பருவமழை, இரண்டு நாட்களாக தீவிரமடைந்துள்ளதால், விளைநிலங்களில், வறட்சி நீங்கி வருகிறது; நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளதால், விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

உடுமலை பகுதியில், விவசாய சாகுபடிக்கு முக்கிய ஆதாரமாக, வடகிழக்கு பருவமழை உள்ளது. பருவமழை பரவலாக கடந்த வாரமே துவங்கியும், இப்பகுதியில், மழை பெய்யவில்லை. இதனால், விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

ஏமாற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இரண்டு நாட்களாக மழை தீவிரமடைந்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு, உடுமலை நகரம் மற்றும் கிராமப்பகுதியில், பல மணி நேரம், மழை நீடித்தது. நகரப்பகுதியில், 41 மி.மீ.,

திருமூர்த்தி அணைப்பகுதியில், 11 மி.மீ., நீர்பிடிப்பு பகுதியான நல்லாற்றில், 58 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது.

நேற்று காலையும், வெயில் இல்லாமல், மேகமூட்டத்துடன், குளிர்ந்த காற்று வீசியது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, நிலவும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையால், மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொடர் மழை காரணமாக, ஏழு குள பாசன திட்டத்திலுள்ள குளங்கள் நிரம்பி வருகின்றன.

ஒட்டுக்குளத்திலிருந்து துவங்கும் ராஜவாய்க்கால் பள்ளத்தில், சுற்றுப்பகுதியிலுள்ள விளைநிலங்களிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர், வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடுகிறது. திருமூர்த்தி அணையிலிருந்து ஏழு குளங்களுக்கு, ஒரு சுற்று தண்ணீர் நிரப்பபட்டுள்ளது.

மழையால், குளங்களில், தண்ணீர் வேகமாக வற்றுவது தவிர்க்கப்பட்டு, அப்பகுதியில், நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்பு உருவாகியுள்ளது. பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்துக்கு, மக்காச்சோளம் உள்ளிட்ட சாகுபடிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். பருவமழையை அடிப்படையாக கொண்டு, கொண்டைக்கடலை, கொத்தமல்லி, கால்நடைகளுக்கான, சோளம் உட்பட தீவனப்பயிர்கள், விதைப்பு மேற்கொள்ள முடியும். வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த தென்னை மரங்கள், மீண்டும் காய்ப்பு திறனுக்கு திரும்ப, உரமிடுதல் பணிகளையும் விவசாயிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

வடகிழக்கு பருவமழையால் கிடைக்கும் தண்ணீரை, குளம் மற் றும் தடுப்பணைகளில், சேகரிக்க, உள்ளாட்சி நிர்வாகங்கள் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், இரண்டு நாட்கள் மழைக்கே, பல்வேறு கிராமங்களில், குடியிருப்பு பகுதிகளில், தண்ணீர் சூழ்ந்துள்ளது. நிலத்தடி நீர் மட்டம் உயர, மழை நீரை சேகரிப்பதன் அவசியம் குறித்து, உள்ளாட்சி நிர்வாகங்கள் துரிதகதியில் செயல்பட வேண்டியது முக்கியம்.

## பருவமழையால் விளைநிலம் குளிர்ந்தது!மகிழ்ச்சியில் திளைக்கும் விவசாயிகள்

உடுமலை: உடுமலை பகுதியில், தாமதமாக துவங்கிய பருவமழை, இரண்டு நாட்களாக தீவிரமடைந்துள்ளதால், விளைநிலங்களில், வறட்சி நீங்கி வருகிறது; நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளதால், விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

உடுமலை பகுதியில், விவசாய சாகுபடிக்கு முக்கிய ஆதாரமாக, வடகிழக்கு பருவமழை உள்ளது. பருவமழை பரவலாக கடந்த வாரமே துவங்கியும், இப்பகுதியில், மழை பெய்யவில்லை. இதனால், விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

ஏமாற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இரண்டு நாட்களாக மழை தீவிரமடைந்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு, உடுமலை நகரம் மற்றும் கிராமப்பகுதியில், பல மணி நேரம், மழை நீடித்தது. நகரப்பகுதியில், 41 மி.மீ., திருமூர்த்தி அணைப்பகுதியில், 11 மி.மீ., நீர்பிடிப்பு பகுதியான நல்லாற்றில், 58 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது.

நேற்று காலையும், வெயில் இல்லாமல், மேகமூட்டத்துடன், குளிர்ந்த காற்று வீசியது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, நிலவும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையால், மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொடர் மழை காரணமாக, ஏழு குள பாசன திட்டத்திலுள்ள குளங்கள் நிரம்பி வருகின்றன.

ஒட்டுக்குளத்திலிருந்து துவங்கும் ராஜவாய்க்கால் பள்ளத்தில், சுற்றுப்பகுதியிலுள்ள விளைநிலங்களிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர், வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடுகிறது. திருமூர்த்தி அணையிலிருந்து ஏழு குளங்களுக்கு, ஒரு சுற்று தண்ணீர் நிரப்பபட்டுள்ளது.

மழையால், குளங்களில், தண்ணீர் வேகமாக வற்றுவது தவிர்க்கப்பட்டு, அப்பகுதியில், நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்பு உருவாகியுள்ளது. பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்துக்கு, மக்காச்சோளம் உள்ளிட்ட சாகுபடிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். பருவமழையை அடிப்படையாக கொண்டு, கொண்டைக்கடலை, கொத்தமல்லி, கால்நடைகளுக்கான, சோளம் உட்பட தீவனப்பயிர்கள், விதைப்பு மேற்கொள்ள முடியும். வறட்சியால்

பாதிக்கப்பட்டிருந்த தென்னை மரங்கள், மீண்டும் காய்ப்பு திறனுக்கு திரும்ப, உரமிடுதல் பணிகளையும் விவசாயிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

வடகிழக்கு பருவமழையால் கிடைக்கும் தண்ணீரை, குளம் மற் றும் தடுப்பணைகளில், சேகரிக்க, உள்ளாட்சி நிர்வாகங்கள் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், இரண்டு நாட்கள் மழைக்கே, பல்வேறு கிராமங்களில், குடியிருப்பு பகுதிகளில், தண்ணீர் சூழ்ந்துள்ளது. நிலத்தடி நீர் மட்டம் உயர, மழை நீரை சேகரிப்பதன் அவசியம் குறித்து, உள்ளாட்சி நிர்வாகங்கள் துரிதகதியில் செயல்பட வேண்டியது முக்கியம்.

## பருவ மழை தீவிரத்தால் பருத்தி செடிகள் செழிப்பு

தியாகதுருகம்: பருவமழை தீவிரமடைந்துள்ளதால் மானாவாரி பருத்தி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
தியாகதுருகம் பகுதியில் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் விவசாயிகள் வருவாய் ஈட்டி வருகின்றனர். இவ்வாண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாததால் பருத்தி விதைப்பு பணிகள் தாமதமானது. செப்., மாதம் பெய்த திடீர் மழையால் கிடைத்த ஈரத்தை கொண்டு விதைப்பு பணிகளை முடித்தனர்.
அதன் பின் போதிய மழையின்றி செடிகள் வாடிய நிலையில் இருந்தது. தண்ணீர் இன்றி ஊட்டமாக வளரமுடியாமல் மகசூல் பாதிக்கும் நிலை உருவானது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை துவங்கி கடந்த சிலநாட்களாக தியாகதுருகம் பகுதியில் ஓரளவு நல்ல மழை பெய்து வருகிறது. இது பருத்தி செடிகளுக்கு புத்துணர்ச்சியை கொடுத்துள்ளது. பூத்து காய்க்கும் பருவத்தில் உள்ள பருத்தி செடிகளுக்கு தற்போதய மழை கைகொடுக்கும். தொடர்ந்து சீரான மழை பெய்தால் பருத்தி மகசூல் மூலம் இப்பகுதி விவசாயிகள் கூடுதல் லாபம் ஈட்ட முடியும்.

## கைகொடுத்தது வடகிழக்கு பருவமழை: தப்பியது டெல்டாவில் சம்பா சாகுபடி

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென சரிந்து, பாசன நீருக்கு பற்றாக்குறை ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், வடகிழக்கு பருவமழை கைகொடுத்துள்ளது. இதனால், நடப்பாண்டு டெல்டாவில் சம்பா சாகுபடியை நிறைவு செய்ய முடியும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மேட்டூர் அணையில், ஆண்டு தோறும் ஜூன், 12ல் பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் மூலம், டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். கடந்த, 2011ல் அணை நீர்இருப்பு திருப்திகரமாக இருந்ததால், ஜூன், 6ம் தேதியே பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. கடந்த, 2012ல் செப்.,17ம் தேதி, 2013ல் ஆக.,2ம் தேதி, 2013ல் ஆக.,10ம் தேதி என தாமதமாக நீர்திறந்ததால், டெல்டா மாவட்டங்களில், மூன்று ஆண்டு குறுவை சாகுபடி பாதித்தது. நடப்பாண்டும் நீர்இருப்பு குறைவாக இருந்ததால் கடந்த, ஆக.,9ம் தேதி டெல்டா பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. இதனால், தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் ஆகிய, 4 டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள், 2 லட்சம் ஏக்கரில் குறுவை, 10 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடியும், இதர,எட்டு காவிரி கரையோர மாவட்டங்களில், 5.10 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொண்டனர். தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், கடந்த, 25ம் தேதி மேட்டூர் அணை நீர்இருப்பு, 25 டி.எம்.சி.,யாக சரிந்தது. இதனால், மேட்டூர் அணையில் சம்பா சாகுபடிக்கு இறுதிவரை நீர்திறக்க முடியாத நிலை ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையடைந்தனர். அதற்கேற்ப கடந்த சில நாட்களாக, மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு சிக்கனமாக தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த இக்கட்டான சூழலில் தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 13 ஆயிரத்து, 956 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 20 ஆயிரத்து,684 கனஅடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்ததால், நேற்று முன்தினம், 28.48 டி.எம்.சி.,யாக இருந்த மேட்டூர் அணை நீர்இருப்பு நேற்று, 30.13 டி.எம்.சி.,யாக அதிகரித்தது. வரும் நாட்களில் அணை நீர் இருப்பு மேலும் அதிகரிக்கும். இன்னமும், 84 நாட்கள் பாசனத்துக்கு நீர்திறக்க வேண்டும். இருப்பு நீர் மற்றும் அணைக்கு வரும் நீரை கணக்கிட்டு, தண்ணீரை சிக்கனமாக திறக்கும் பட்சத்தில், சம்பா சாகுபடிக்கு முழுமையாக

நீர்திறக்க முடியும். சம்பா சாகுபடி பாதிக்கும் அபாயத்தில் இருந்த இக்கட்டான சூழலில் வடகிழக்கு பருவமழை கைகொடுத்தது, டெல்டா விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

### பவானிசாகர் அணை நீர் சப்ளை கன மழையால் நிறுத்தம்

பவானிசாகர்: பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்காலுக்கான நீர் திறப்பு முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் நேற்று பரவலாக கன மழை கொட்டி தீர்த்தது. விடிய, விடிய பெய்த மழையால் வயல்வெளிகளில் தண்ணீர் சூழ்ந்தது. வாய்க்கால்களின் முழு கொள்ளளவு நிலையில் நீரோட்டம் காணப்பட்டது. மழையால் வாய்க்கால்கள் உள்ளிட்ட நீர் நிலைகள், ஆறுகளுக்கு தண்ணீர் சென்ற வண்ணம் இருந்தது. இதனால் பவானிசாகர் அணையில் இருந்த பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்கான நீர் திறப்பு முற்றிலுமாக நேற்று காலை நிறுத்தப்பட்டது.

### வெளுத்து கட்டும் பருவமழை: கன்றுக்குட்டி வியாபாரம் ஜோர்

பு.புளியம்பட்டி: தமிழகத்தில் பொள்ளாச்சிக்கு அடுத்தபடியாக, இரண்டாவது பெரிய மாட்டுச் சந்தையாக புன்செய் புளியம்பட்டி வாரச்சந்தை உள்ளது. இங்கு புதன், வியாழக்கிழமைகளில் வாரச்சந்தை நடக்கிறது. புதன் மாலை முதல் அடிமாட்டு சந்தை துவங்கும். நேற்று நடந்த சந்தையில் மேட்டுப்பாளையம், குன்னூர், கோவை, நம்பியூர் பகுதி விவசாயிகள் பசு, எருமை கன்றுக் குட்டிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா வியாபாரிகளும் வந்திருந்தனர். வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால், விவசாயிகள் அதிகளவில் கன்றுக் குட்டிகளை வாங்கிச் சென்றனர்.

### இரு பூக்களுடன் அதிசய வாழைத்தார்

பந்தலூர்: பந்தலூர் அருகே நெல்லியாளத்தில், இரு பூக்களுடன் காணப்படும் வாழைத்தாரை கண்டு, அப்பகுதி மக்கள் அதிசயிக்கின்றனர்.

நீலகிரி மாவட்டம், பந்தலூார் அருகே நெல்லியாளம் ஆரம்பப்பள்ளி அருகே வசிப்பவர் சின்னத்தம்பி. இவரது வீட்டு தோட்டத்தில் நேந்திரன் வாழை பயிரிட்டுள்ளார். இதில், ஒரு வாழை, இரு பூக்களுடன் குலை தள்ளியுள்ளது. இதை, இப்பகுதி மக்கள், ஆச்சர்யத்துடன் பார்த்து செல்கின்றனர். சின்னத்தம்பி கூறுகையில், "சாதாரணமாக, வாழைத்தார் ஒரு பூவுடன் மட்டுமே குலை தள்ளும். இந்த வாழை, இரு பூக்களுடன் குலை தள்ளியிருப்பது, அதிசயமாக உள்ளது," என்றார்.

### குளித்தலை பகுதியில் கனமழை: நீரில் மூழ்கிய வாழை, நெல் பயிர்கள்

குளித்தலை: குளித்தலை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த கன மழையால், வாழை, நெல் பயிர்கள் நீரில் மூழ்கின.
குளித்தலை பகுதியில், நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் மேட்டுமருதுார், கூடலுார், ராஜேந்திரம் ஊராட்சியில் உள்ள பரளி, தண்ணீர்ப்பள்ளி ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள, 500க்கு மேற்ப்பட்ட ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட நெல் மற்றும் கரும்பு, வாழை பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இதுகுறித்து, குளித்தலை ஆற்றுபாதுகாப்பு பாசனப்பிரிவு பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் செங்கவராயன் கூறியதாவது: குமாரமங்கலம் அருகே, காட்டுவாரியின் மீது கட்டப்பட்டுள்ள தடுப்பணையை உடனடியாக அகற்ற மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். தற்போது வெள்ளம் அதிகாமக உள்ளதால், இந்த பணியை செய்யமுடியாமல் உள்ளது. வெள்ளம் முடிந்தவுடன் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், அந்த தடுப்பணை இடிக்கப்படும் என தகவல் தெரிவித்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

### க.பரமத்தியில் அதிக மழைப்பதிவு: மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: கரூர் மாவட்டம் முழுவதும், பரவலாக மழை பெய்ததால், மானாவாரி பயிர் செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் காலை, 8 முதல் நேற்று காலை, 8 மணி வரை பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு விவரம்: க.பரமத்தியில் அதிகபட்சமாக, 151.6 மி.மீ., மழை பெய்தது. குறைந்தளவாக குளித்தலையில் 20 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. அரவக்குறிச்சியில் 73, தோகமலையில் 30, மாயனூரில் 44, கரூரில் 69, அணைப்பாளையத்தில் 111, பஞ்சப்பட்டியில் 40, பாலவிடுதியில் 95.4, கடவூரில் 43, கிருஷ்ணராயபுரத்தில் 42, மயிலம்பட்டியில், 85 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டம் முழுவதும் மொத்தம், 804 மில்லி மீட்டர் மழைப்பதிவாகியுள்ளது. சராசரியாக, 67 மி.மீ., மழை பெய்துள்ளது. இதன்காரணமாக கரூர் மாவட்ட விவசாயிகள் மற்றும் மானாவாரி பயிரிடும் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். "தற்போது பெய்த மழை காரணமாக நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், காய்ந்து கிடந்த கிணறுகள் மற்றும் நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கி கால்நடைகளுக்கும், விவசாயத்துக்கும் பயன்பட்டு வருகிறது," என்று க.பரமத்தியைச் சேர்ந்த விவசாயி ராமராஜன் கூறினார்.

### ஒட்டன்சத்திரத்தில் பலத்த மழை:அணைக்கு நீர்வரத்து இல்லை

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. சமவெளிப் பகுதி அளவுக்கு மலைப் பகுதியில் இல்லாததால், பரப்பலாறு அணை நீர்மட்டம் ஓர்அடி கூட உயரவில்லை.ஒட்டன்சத்திரத்தில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது சாரல் மழை பெய்தது. மானாவாரி நிலங்களில் மக்காச் சோளம், கடலை, பருத்தி பயிரிட்டோருக்கு இம்மழை போதுமானதாக இல்லாமல் இருந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு ஒட்டன்சத்திரம் பகுதியில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இரவு 11 மணி வரை வெளுத்து கட்டியது. பின் விடிய விடிய மழை பெய்தது.

காமாட்சி அம்மன் கோயில் அருகே செல்லும் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்பு காரணமாக, ஓடை குறுகலாக உள்ளது. மேலும் ஓடையில் அடைப்பு

ஏற்பட்டதால், காட்டாற்று வெள்ளம் ரோட்டில் ஓடியது. இதனால் காமாட்சி அம்மன் கோயில், கிறிஸ்தவ மருத்துவமனை, போலீஸ் ஸ்டேஷன் வாளகத்திற்குள் மழைநீர் புகுந்தது. ஒட்டன்சத்திரம்-திண்டுக்கல் ரோட்டில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.
கிராமப்பகுதிகளில் பெய்த மழை அளவை காட்டிலும் மலைப் பகுதிகளில் குறைவான மழையே பெய்தது. மலைப்பகுதியில் 45 மி.மீ. மழை அளவு பதிவாகி இருந்த போதிலும், பரப்பலாறு அணைக்கு நீர்வரத்து மிகவும் குறைவாக இருந்தது. இதனால் 69.25 அடியாக இருந்த நீர்மட்டம் முக்கால் அடி மட்டுமே உயர்ந்து 70 அடியாக இருந்தது. மழை காரணமாக ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்த குட்டைகளுக்கு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. நீண்ட நாள்களுக்கு பிறகு நல்ல மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு மாணவர்கள் பயிற்சி

திண்டுக்கல்:கிராம தங்கல் திட்டத்தின் கீழ், வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். சத்திரப்பட்டியில் வேளாண் விழிப்புணர்வு முகாம் நடந்தது. பேராசிரியர் அறிவுடைநம்பி மற்றும் வானவராயர் வேளாண் கல்வி நிறுவன மாணவர்கள், விசாயிகளுக்கு பூச்சி மேலாண்மை மற்றும் ஊறுகாய் தயாரிக்கும் முறை, கால்நடைகளுக்கு ஊறுகாய்புல் வழங்குவதால் பால் அதிகரிப்பது குறித்து விளக்கினார்.

மேலும் ஒட்டன்சத்திரம் கே.ஆர்., மேல்நிலைப் பள்ளியில் வீட்டுத் தோட்டம் அமைப்பது குறித்து விளக்கினர்.குறுஞ்செய்தி: சின்னளாபட்டியில், தேனி வேளாண் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் சார்பில் விவசாயிகளுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பிவருகின்றனர். இதில் பயிர்களுக்கு உரமிடும் முறை, பூச்சி கட்டுப்பாடு, நோய் நீக்கம், இயற்கை வேளாண்மை, பாரம்பரிய வேளாண்மை குறித்த செய்திகள் அடங்கும். மேலும், கன்னிவாடி விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் குறித்தும் பயிற்சி அளித்தனர்.

## கால்நடை தீவனத்திற்கு தீர்வு

நிலக்கோட்டை;நிலக்@காட்டை பகுதிகளில் கண்மாய் பாசனத்தை நம்பியே விவசாயம் நடக்கிறது. அதிக மழை இல்லாததால் குறுகிய கால மானாவாரி பயிர்களான கம்பு, சோளத்தை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மூன்று மாதங்களுக்குள் மழை பெய்தால் சோளம், கம்பு சாகுபடி செய்யலாம். மழை பெய்யாவிட்டால் தட்டைகள் கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படும்.

பாலம்பட்டி முருகன் கூறுகையில்,""இந்த ஆண்டு கால்நடை தீவனத்திற்கு பிரச்னை இருக்காது" என்றார்.

## சிவகங்கையில் தொடர் மழை

சிவகங்கை:சிவகங்கையில் நேற்று முன்தினம் இரவு மழை கொட்டி தீர்த்தது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் பரவலாக அனைத்து தாலுகாவிலும் நவ.,1ம் தேதி முதல் தினமும் நல்ல மழை பெய்து வருகிறது. விவசாயிகள் நாற்று நடுதல் உள்ளிட்ட விவசாய பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி சிவகங்கையில் அதிகபட்சமாக 87 மி.மீ.,பதிவானது. அதை தொடர்ந்து மானாமதுரையில் 50.6, திருப்புவனம் 40.6, இளையான்குடி 28, திருப்புத்தூர் 20.2, தேவ கோட்டை 8.22, காரைக்குடி 3.2 மி.மீ., மழை பதிவானது.

## தீவன பற்றாக்குறையை போக்க விவசாயிகளின் வீடுதோறும் மரக்கன்று:கால்நடைத்துறையினர் மும்முரம்

காரைக்குடி:ஆடு, மாடுகளுக்குரிய தீவன பற்றாக்குறை அதிகரித்து வரும் வேளையில், கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை மருத்துவ மனைகளில் மரக்கன்று இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.தமிழக அரசு சார்பில் விலையில்லா கறவை மாடு, ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் கிராமங்களில் வீடுதோறும் கால்நடை வளர்ப்பு பெருகி வருகிறது. மேய்ச்சல் நிலம் விற்பனையாகி வருவதால், தெருக்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவு,குப்பைகளை ஆடு, மாடுகள் உணவாக உட்கொள்ளும் அவலம் உள்ளது.

இருக்கின்ற ஒரு சில இடங்களில் மழைக்காலங்களில் மட்டுமே மேய்ச்சலுக்கான புல்வெளி உள்ளது. கோடை காலங்களில் தீவன பற்றாக்குறை அதிகமாக உள்ளதால், கால்நடை துறை சார்பில் மானியத்தில் தீவனம் வழங்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையை போக்கும் வகையில், ஆடுகளுக்குரிய தீவனமரங்களான பூவரசு, கொன்றை, முள்முருங்கை, வாகை மரங்களை வீடுதோறும் வைக்க, கால்நடைத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ஒரு பயனாளிக்கு இலவசமாக ஐந்து மரக்கன்று வீதம், ஒரு மருத்துவமனைக்கு 150 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. ரேஷன்கார்டு நகல் மற்றும் கால்நடைகளின் எண்ணிக்கை குறித்த விபரங்களை கூறி, இவற்றை அந்தந்த கால்நடை மருத்துவமனைகளில் விவசாயிகள் பெற்று வருகின்றனர்.

### மேற்கு தொடர்ச்சி மலையில் மழை

ராஜபாளையம்:மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த பலத்த மழையால் ராஜபாளையம் கோடைகால குடிநீர் தேக்கத்தில் 17.6 அடியாக நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. ராஜபாளையம் நகராட்சி பகுதிக்கு தாமிரபரணி குடிநீர் இதுவரை கிடைக்கவில்லை. ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தை மாற்றி, திருநெல்வேலி மாவட்டம் மானூர் பகுதியில் இருந்து குடிநீர் கொண்டுவர மற்றொரு திட்டத்தில் ஏற்பாடு நடந்தது. இந்த திட்டமும் செயல்பாடு இன்றி இருப்பதால், மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீரே, ராஜபாளையம் நகருக்கு குடிநீர் ஆதாரமாக உள்ளது.

மலையில் தொடர்மழை பெய்யும்போது சிற்றாறுகள் மூலம் வரும் மழைநீர் மலையடிவாரம் அருகே அய்யனார்கோயில் ஆற்றிற்கு வரும். இங்கு தடுப்பணை அமைத்து கோடை கால குடிநீர் தேக்கத்தில் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. 24 அடி கொண்ட இந்த தேக்கத்தில் 19 அடி மட்டும் தண்ணீர் சேமிக்கமுடியம்.

மேற்கு தொடர்ச்சி மலையில் கடந்த சில நாட்களாக இரவில் பலத்த மழை பெய்து வருகிறது. அய்யனார்கோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகமாகி உள்ளது.

தேக்கத்தின் நீர்மட்டம் நேற்று 17.6 அடியாக உயர்ந்தது. தேக்கம் ஒருமுறை நிறைந்தால் ஆறுமாதத்திற்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.

## சிவகாசியில் 70.4 மி.மீ., மழை

விருதுநகர்:வடகிழக்கு பருவமழை காரணமாக நேற்றுமுன்தினம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. நேற்று காலை 8.30 மணிப்படி மழையளவு(மி.மீ): அருப்புக்கோட்டை 7, சாத்தூர் 6, சிவகாசி 70.4, ஸ்ரீவி.,62.5, விருதுநகர் 8.6, திருச்சுழி 2, ராஜபாளையம் 22, காரியாபட்டி 5, வத்திராயிருப்பு 8, பிளவக்கல் 18, கோவிலாங்குளம் 9.2.

## பாபநாசம் அணை இன்று திறப்பு; 86 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறும்

திருநெல்வேலி :நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பிசான நெல் சாகுபடிக்காக பாபநாசம் அணை நீர் இன்று திறக்கப்படுகிறது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பிசான நெல்சாகுபடி பருவத்திற்கான நெல்நடவு பணிகள் தற்போது வங்கியுள்ளது. வடகிழக்குபருவமழையை நம்பி மேற்கொள்ளப்படும் இந்த தருணத்தில், பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறுஅணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெ.,உத்தரவிட்டுள்ளார். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள தாமிரபரணி ஆற்றின் கீழ் 11 கால்வாய்களின்மூலம் பயன்பெறும் நேரடி மற்றும் மறைமுக பாசனப் பரப்புகளுக்கு இன்று 6ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நெல்லை கலெக்டர் கருணாகரன், பாபநாசம் அணையை இன்று திறந்துவைக்கிறார்.இதன் மூலம் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில்86,107 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மாநிலங்களுக்கு 27 லட்சம் டன் கூடுதல் உணவு தானியங்கள்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தாத மாநிலங்களில் பொதுமக்களுக்கு ஆறு மாதங்களில் விநியோகம் செய்வதற்காக கூடுதலாக 27 லட்சம் டன் உணவு தானியங்களை மத்திய அரசு வழங்கவுள்ளது.

தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை 20 மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் அமல்படுத்தியுள்ளன.

தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்கள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பொது விநியோகத் திட்டத்தையே தொடர்கின்றன.

இந்நிலையில், இந்த மாநிலங்களில் அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாதங்களில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கு கூடுதலாக 27 லட்சம் டன் உணவு தானியங்களை மத்திய அரசு வழங்கவுள்ளது.

மாநிலங்களின் கடன் சுமை....: திவாலாகக் கூடிய நிலையில் உள்ள மாநில அரசு மின் பகிர்மான நிறுவனங்களின் ரூ.4.3 லட்சம் கோடி கடன் சுமைக்கு தீர்வு காண்பதற்கான புதிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதன்படி, மின் பகிர்மான நிறுவனங்களின் 75 சதவீத கடனுக்கு, கடன் பத்திரங்கள் மூலம் மாநில அரசுகள் நிதி திரட்டுவதற்கும், மீதமுள்ள தொகைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களே கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஒப்பந்தங்கள்: வரி விவரங்களை பகிர்ந்து கொள்வது குறித்து துர்க்மெனிஸ்தானுடன் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை சார்ந்த தொழில்நுட்பத்தில் இருதரப்பிலும் ஒத்துழைப்பு அளிப்பது என பெல்ஜியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஆகியவற்றுக்கும்

அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**மழை பெய்தும் காற்றில் குறையாத நுண் துகள் மாசுகள்**

தில்லியில் மழை பெய்த போதிலும், காற்றில் உள்ள நுண் துகள் மாசுகளின் அளவு குறையவில்லை என்று தெரியவந்துள்ளது.

தில்லி பல்கலைக்கழகம், பிதம்புரா, இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், திர்பூர் உள்ளிட்ட பகுதிகளில் உச்சக்கட்ட அளவிலான காற்றுமாசு ஏற்பட்டுள்ளதாக, அங்கு அமைக்கப்பட்டுள்ள காற்றுத் தர மற்றும் வானிலை கணிப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (சஃபர்) நிலையங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இதன்படி, தில்லி பல்கலைக்கழகம் மற்றும் அதைச் சுற்றி உள்ள பகுதிகளில் 2.5 பி.எம்., 10 பி.எம். அளவிலான காற்று மாசு குறியீடு, முறையே 357 மற்றும் 301 அளவுகளில் உள்ளது. இதுவே வடமேற்கு தில்லியின் பிதம்புரா பகுதியில் முறையே 302 மற்றும் 301 என்ற அளவிலும், திர்பூர் பகுதியில் முறையே 325 மற்றும் 340 என்ற அளவில் உள்ளது.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறுகையில், "காற்றில் உள்ள நுண் துகள் மாசுகளை களையும் அளவிற்கு மழை பெய்யவில்லை. எனினும், வரும் நாள்களில் அதற்கான வாய்ப்புகள் இருந்தாலும், தீபாவளிப் பண்டிகையின்போது ஏற்படும் மாசுக்களால் அவை வீணாகும்' என்றார்.

**ஏரிகளை மேம்படுத்த புதிய தொழில்நுட்பம்**

ஏரிகளை மேம்படுத்த உயிரித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் என கர்நாடக மாநில அறிவு ஆணையம் மாநில அரசுக்கு பரிந்துரை வழங்கியுள்ளது.

கர்நாடக முதல்வர் சித்தராமையாவை புதன்கிழமை சந்தித்து, ஆணையத்தின் பரிந்துரைகளை அளித்த பின்னர், செய்தியாளர்களிடம் அதன் தலைவர் கஸ்தூரிரங்கன் கூறியது:

கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகள், பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை முதல்வர் சித்தராமையாவிடம் அளித்துள்ளேன். இந்த அறிக்கையில் மாநில அறிவு ஆணையம் செய்துள்ள பணிகள் குறித்தும் குறிப்பிட்டுள்ளேன். மைசூரில் காவிரி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது குறித்து தெரிவித்துள்ளேன்.

அறிவியல் அடிப்படையில் குழந்தைகளுக்கு பாடத் திட்டங்கள் வகுப்பது குறித்த ஆலோசனைகளும் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. மேலும், ஏரிகளை மேம்படுத்துவதற்கு உயிரித் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது குறித்தும் அறிக்கையில் உள்ளது. பெங்களூரில் உள்ள மடிவாளா ஏரியில் இதை சோதனை முயற்சியாக செயல்படுத்தலாம் என பரிந்துரை செய்துள்ளேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.22 கோடி செலவாகும். கர்நாடகத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் உயிரித் தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்த முடியும். மருத்துவத் துறையில் சீர்த்திருத்தம், ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். அறிவு ஆணையத்தின் செயல்பாடுகளை முதல்வர் சித்தராமையா வெகுவாகப் பாராட்டினார்.

சகிப்புத்தன்மை குறித்து நாட்டில் நடந்து வரும் விவாதங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்றார்.

## விளை நிலங்களில் நகரமா?

ஆந்திர மாநிலத்தில் அமராவதியைத் தலைநகரமாக அமைப்பதற்காக சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களைக் கையகப்படுத்தி நகரம் அமைக்கப்படுகின்ற செய்தி அதிர்ச்சியையும், வருத்தத்தையும் ஏற்படுத்துகின்றது. நாடு முழுவதும், தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில் சமீப காலங்களில் விளை நிலங்களை குடியிருப்பு வசதி ஏற்படுத்தவும், தொழிற்சாலை கட்டுவதற்கும் உபயோகித்து வருகின்றனர். நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயத் துறையும், தொழில் துறையும் இன்றியமையாதது. தொழில் முன்னேற்றத்தின் அவசியமும், விவசாய

முன்னேற்றத்தின் அவசியமும் ஒன்றுக்கொன்று முரணானது இல்லை என்பதை நாம் என்றும் மனதில் கொள்ள வேண்டும்.

இத்தகைய நிலையில், தொழில் வளர்ச்சிக்கோ அல்லது நகர்ப்புற வளர்ச்சிக்கோ விளை நிலங்களை உபயோகிப்பது ஒப்புக்கொள்ள முடியாத செயல். இத்தகைய அணுகுமுறை எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும்.

12-ஆம் ஐந்தாண்டு திட்டத்தில், முதல் நான்கு ஆண்டுகளில் நாட்டின் விவசாய வளர்ச்சி 1.5 சதவீதம்தான். நான்கு சதவீத வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற இலக்கு எட்டப்படவில்லை.

குறைந்த விவசாய வளர்ச்சி விகிதத்தால், கிராமப்புற வளர்ச்சிக்கும், ஏழ்மையை அகற்றும் முயற்சிக்கும் பின்னடைவு ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. இத்தகைய நிலையில், விவசாயத்துக்கு குந்தகம் ஏற்படுத்தக்கூடிய எந்தச் செயலிலும் அரசு ஈடுபடக் கூடாது.

இந்தியாவில் மொத்த மக்கள்தொகையில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரம் பொதுவாக கவலை அளிக்கும் நிலையிலேயே உள்ளது.

நரேந்திர மோடி அரசு, விவசாயத் தொழிலில் இந்த அளவு மக்கள் ஈடுபட வேண்டிய அவசியமில்லை என்று தனது கருத்தைக் கூறியிருக்கிறது. விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்போர்களின் தொகை தேவைக்கு அதிகமாக உள்ளது. அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு, கணிசமான அளவில் விவசாயிகளை வேறு தொழிலுக்கு மாற்ற வேண்டும்.

அதற்கு அவர்களுக்கு வேறு தொழிலில் பயிற்சியும், வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் மோடி அரசு கூறி வருகிறது. மோடி அரசின் இத்தகைய அணுகுமுறையைக் குறை கூற முடியாது.

அதேசமயம், விவசாயிகளை வேறுவிதமான வருவாய் அளிக்கக் கூடிய முறைக்கு மாற்றும் கொள்கை வேறு, விவசாய விளை நிலங்களை விவசாயம் அல்லாத தொழிலுக்கு ஈடுபடுத்துவது வேறு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டுக்குத் தொழில் வளர்ச்சி எந்தளவில் அவசியமோ, அதே அளவில் விவசாய வளர்ச்சியும் அவசியம் என்பதை நாம் புரிந்து கொண்டு, விவசாயத் துறை வளர்ச்சியின் தேவையைக் குறைவாக மதிப்பிடுவது போன்ற

செய்கையை அரசு அறவே தவிர்க்க வேண்டும்.

இந்தியாவில் தற்போது சுமார் 1,600 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு விவசாயம் செய்யக் கூடிய நிலம் உள்ளது. விவசாயப் பொருள்கள் ஏற்றுமதியில், அமெரிக்கா, பிரேசில், சீனா, கனடாவிற்கு பின் இந்தியா முன்னணியில் உள்ளது.

ஆனால், இந்தியாவில் தொழிலமைப்புகள், மின் பொருள் துறைகள் இறக்குமதி செய்யும் அளவைப் பார்க்கும் போது, விவசாயத் துறைக்கு செய்யப்படும் இறக்குமதி மிகவும் குறைவு.

இந்தியா ஒரு விவசாயம் சார்ந்த நாடு. என்றென்றும் இந்தியா விவசாயம் சார்ந்த நாடாகத்தான் திகழும். இந்த நிலைமை நாம் பெருமைப்பட வேண்டியது. விவசாயத் துறை இந்தியாவின் முதுகெலும்பு என்பதை நாம் மறக்கக் கூடாது.

இந்த யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு, விவசாயத் துறைக்கு உரிய மரியாதையைக் கொடுப்பது நாட்டின் கடமை. விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு சகலவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியது அரசின் கடமை. கல்லும், சிமென்ட்டும் இல்லாமலும் மக்கள் வாழ முடியும். அரிசியும், கோதுமையும் இல்லாமல் வாழ முடியாது.

சமீபத்தில் மோடி அரசால் அறிவிக்கப்பட்ட நிலம் கையகப்படுத்தும் மசோதா, கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை. மோடி அரசு இந்த மசோதாவைக் கைவிட்டதை விவசாயிகளின் குரலுக்கு மதிப்பு கொடுத்து செவி சாய்த்தது என்றே கொள்ள வேண்டும்.

இன்று நாட்டில், ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் உள்ளன. தொழில்சாலை அமைக்க ஏற்கெனவே நாடெங்கும் அளிக்கப்பட்ட நிலம் பெரிதளவில் உபயோகிக்கப்படாமல் வீணாகிக் கொண்டு வருகின்றன.

பல நலிவுற்ற, மூடிக் கிடக்கும் தொழில்சாலைகளில் பரந்த நிலப்பரப்புகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலங்களை தொழில்சாலை அமைக்கவும், வீட்டு வசதி ஏற்படுத்தவும் உபயோகிக்கலாம். இந்த தரிசு நிலமும், உபயோகிக்கப்படாத நிலமும் இன்றைய அவசியத்திற்குப் போதுமானவை. உபயோகிக்காமல் உள்ள தரிசு நிலங்களை நோக்கி

தொழில்சாலையும், நகரங்களும் நகர வேண்டுமே அல்லாமல், விளை நிலத்தினை அழித்து, நகரங்களை அமைக்கவும், தொழில்சாலை அமைப்பதையும் தவிர்க்க வேண்டும்.

**தொடர் மழை எதிரொலி: கண்மாய்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால், மாவட்டத்திலுள்ள கண்மாய்கள் நிரம்பி வருகின்றன.

வடகிழக்குப் பருவ மழை தொடங்கியுள்ளதை அடுத்து, கடந்த சில நாள்களாக மதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், கால்வாய்களில் நீர்வரத்து ஏற்பட்டு கண்மாய்களில் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், புதன்கிழமை இரவு முதல் விடிய விடிய பெய்த கனமழையால் கண்மாய்கள் நிரம்பின. கடச்சனேந்தல் அருகே உள்ள அரும்பனூர் கண்மாய் நிறைந்தது. அரும்பனூர் அருகே உள்ள நவக்குளம் கண்மாய் நிரம்பி மறுகால் பாய்ந்தது. கனமழையால் அழகுநாச்சியார்புரத்தில் வயலில் நெற்கதிர்கள் சாய்ந்தன.

தொடர் மழையால் மாவட்டம் முழுவதும் உள்ள கண்மாய்களுக்கு நீர்வரத்து தொடங்கியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எனவே, வேளாண் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேர மழை அளவு (மில்லி மீட்டரில்):

மதுரை - 53, விரகனூர் - 12, சாத்தையார் - 20, கச்சைகட்டி - 67, குப்பணம்பட்டி - 35, கள்ளந்திரி - 73, சிட்டம்பட்டி - 112, புலிப்பட்டி - 65, மேலூர் - 37.7, தனியாமங்கலம் - 28.5, இடையப்பட்டி - 34.

**கொடைக்கானலில் விடிய விடிய மழை: பல இடங்களில் மரங்கள் விழுந்து மின்சாரம் துண்டிப்பு**

கொடைக்கானலில் விடிய விடிய பெய்த பலத்த மழையின் காரணமாக பல இடங்களில் மரங்கள் விழுந்ததில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் பொது மக்கள் அவதியடைந்தனர்.

கொடைக்கானலில் புதன்கிழமை இரவு முதல் விடிய விடிய மழை பெய்தது. காற்றுடன் பெய்த மழையின் காரணமாக வியாழக்கிழமை அதிகாலையில் செயிண்ட் மேரீஸ் சாலை, உட்வில் ரோடு ஆகியப் பகுதிகளிலுள்ள மின் கம்பங்கள் மீது மரங்கள் சாய்ந்து விழுந்தன. மேலும் கொடைக்கானல் ஏரிச் சாலைப் பகுதியிலுள்ள கே.ஆர்.ஆர்.கலையரங்க வளாகத்தில் இருந்த யூகலிப்டஸ் மரம், அங்குள்ள கட்டணக் கழிப்பறை மீது விழுந்ததால் கட்டடம் சேதமடைந்தது. மேலும் அப் பகுதியிலுள்ள மின் வயர்களிலும் மரக் கிளைகள் விழுந்ததால் மின் கம்பங்களும் சாய்ந்தன.

இதே போல் பல இடங்களில் விழுந்த மரங்களால் மின் கம்பங்களும், மின் வயர்களும் சேதமடைந்து, 4 மணி நேரத்துக்கும் மேல் கொடைக்கானலில் மின் தடை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கொடைக்கானல் மின்துறை பணியாளர்கள் 20-க்கும் மேற்பட்டோர் அந்த இடங்களுக்குச் சென்று மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதையடுத்து மின் விநியோகம் சீரானது.

ஆபத்தான மரங்களை அகற்றக் கோரிக்கை:கொடைக்கானல் கே.ஆர்.ஆர். கலையரங்கம் பகுதி, உட்வில் ரோடு, பெர்ன்ஹில் சாலை, பெருமாள்மலை சாலை, அடுக்கம் சாலை, குருசடி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலுள்ள ஆபத்தான மரங்களை அகற்ற நகராட்சி, வனத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து நகராட்சி ஆணையர் சரவணன் கூறும் போது, கொடைக்கானல் நகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் அபாயகரமான மரங்களை அகற்ற தற்போது டெண்டர் விடப்பட்டுள்ளது. விரைவில் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## நெற்பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவிப்பு

நெல்லின் தூர் பகுதியில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த நிலக்கோட்டை வட்டார விவசாயிகளுக்கு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, நிலக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கா.முருகன் தெரிவித்தது: கடந்த சில நாள்களாக மேகமூட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது. பருவநிலை மாற்றத்தால் சில இடங்களில் புகையான் தாக்குதலால் நெல் தூர்பகுதி காய்ந்து பழுப்பு நிறத்தில் தென்படுகிறது. எனவே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரத்தில் அணைப்பட்டி, மட்டப்பாறை, விளாம்பட்டி மற்றும் ராமராஜபுரம் பகுதிகளைச் சேர்ந்த நெல் சாகுபடி விவசாயிகள் தங்களது வயலில் மேற்கண்ட அறிகுறிகள் தென்பட்டால், நெல் பயிரின் தூர்பகுதியை 8 அடிக்கு 8 அடி இடைவெளியில் பயிரை நன்றாக ஒதுக்கிவிட்டு, சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் பயிருக்கு நன்றாக கிடைக்கச் செய்திட வேண்டும்.

மேலும், வயலில் உள்ள நீரை வெளியேற்றி விட்டு, மாலத்தியான் தூள் மருந்தினை ஏக்கருக்கு 15 கிலோ என தூர்பகுதியில் படும்படி தூவி, புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு அசிப்பேட் 2 கிராம், நூவான் 1 மில்லி சேர்த்து தெளித்தும் புகையானைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும் இது சம்பந்தமான சந்தேகங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மைத் துறை அலுவலகத்தில் தொடர்புகொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொண்டார்.

## தொடர் மழை: கொட்டகுடி ஆற்றில் நீர் வரத்து அதிகரிப்பு

போடி பகுதியில் பெய்து வரும் தொடர் மழையினால் கொட்டகுடி ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

போடி பகுதியில் கடந்த சில நாள்களாகவே பரவலாக கன மழை பெய்து வருகிறது. போடி நகர் பகுதிகளில் மட்டுமின்றி போடிமெட்டு, கொட்டகுடி, குரங்கனி, வடக்குமலை பகுதிகளிலும் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் காப்பி உள்ளிட்ட விவசாய பயிர்களுக்கு இந்த மழை சாதகமாக அமைந்துள்ளது.

தொடர் மழையின் காரணமாக போடி கொட்டகுடி ஆறு, தாதனோடை ஆறு, நண்டலை, கூவலிங்க ஆறு உள்ளிட்ட ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பிள்ளையார் அணையில் தண்ணீர் அருவி போல் கொட்டுகிறது. எனவே பொதுமக்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**உழவர் பாதுகாப்புத் திட்ட பயனாளிகள் நல உதவி பெற விண்ணப்பிக்கலாம்**

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தேனி மாவட்டத்தில் அடையாள அட்டை பெற்றுள்ள பயனாளிகள் அரசு நல உதவிகள் பெற விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நலன் கருதி, அரசு சார்பில் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர் குடும்பத்துக்கு திருமண உதவித் தொகை, ஓய்வூதியம், கல்வி உதவித் தொகை, இயற்கை மரண நிவாரண நிதி, விபத்து மரணம் மற்றும் காயத்துக்கு நிவாரண நித வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ், சிவப்பு நிற (மெரூன்) அடையாள அட்டை பெற்றுள்ள பயனாளிகள், அரசு நல உதவிகள் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அல்லது சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் உரிய படிவம் பெற்று விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**இயந்திர நடவு மூலம் கூடுதல் மகசூல்: ஆட்சியர் தகவல்**

இயந்திர நடவு முறையின் மூலம் ஏக்கருக்கு 40 முதல் 45 மூட்டைகள் நெல் மகசூல் பெறலாம் என்று விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.ராஜாராமன் கூறினார்.

ஸ்ரீவில்லிபுத்தூர், குன்னூர் பகுதியில் விவசாயப் பணிகளை வியாழக்கிழமை ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:

வேளாண் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இச்சூழலில் வேளாண்மையில் இயந்திரமயமாக்கலின் முத்தாய்ப்பாக நெல்லுக்கு நடவு இயந்திரம் திகழ்கிறது.

இயந்திர நடவு முறையில் ஏக்கர் ஒன்றுக்கு 12 கிலோ விதை போதுமானது. 1 சென்ட் நாற்றங்கால் போதுமானது. விதைத் தேவையில் 13 கிலோ வரை சிக்கனம் செய்யலாம். களை எடுக்க வேண்டிய அவசியமே ஏற்படாது. ஒரு சென்ட் நாற்றங்கால் அமைப்பதற்கு பதிலாக தட்டுகளிலும் நாற்றுகளை வளர்த்து நடவு மேற்கொள்ளலாம். இதற்கு 80 தட்டுகளிலுள்ள நாற்றுகள் ஒரு ஏக்கருக்கு போதுமானது. நெல் இயந்திர நடவு முறையில் 14 முதல் 18 நாள் நாற்றுகள் பறித்து நடப்பட வேண்டும். 18 நாள்கள் நாற்றுகளை உரிய நேரத்தில் நடுவதால் நாற்றுகள் வீரியமாக வளர்ந்து, உற்பத்தித் திறன் மிக்க சிம்புகளை அதிகமாக உருவாக்குகிறது.

இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகள் கோனா களைக் கருவி கொண்டு நட்டு 10-ஆம் நாள் முதல் 10 நாள்கள் இடைவெளியில் 3 முறை உருட்ட வேண்டும். கோனா களைக் கருவி உருட்டுவதால், பக்கச் சிம்புகள் அதிகளவில் வெடித்து தூர்கள் நன்கு கட்டும்.

இயந்திர நடவு மேற்கொண்டு வேளாண் தொழில் நுட்பங்களை கடைபிடிக்கும் பட்சத்தில், சாதாரண முறையில் ஏக்கருக்கு 30 முதல் 35 மூட்டைகள் கிடைக்கும். இயந்திர நடவினால் ஏக்கருக்கு 40 முதல் 45 மூட்டைகள் மகசூல் எடுக்கலாம். இயந்திர நடவு முறை வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையினை நீக்குவதுடன் அதிக மகசூலுக்கும் வழி வகை செய்கிறது.

தமிழக அரசும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் இயந்திர நடவு மானியமாக ஏக்கருக்கு ரூ.1200 வழங்கி ஊக்குவித்து வருகிறது. விவசாயிகள் இம் முறையைப் பயன்படுத்தி செலவினைக் குறைத்து அதிக லாபம் பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

**சிவகாசியில் 70.4 மி.மீ. மழை**

சிவகாசியில் புதன்கிழமை இரவு 70.4 மி.மீ. மழை பெய்துள்ளது.

விருதுநகர் மாவட்டத்தின் பிற பகுதிகளில் புதன்கிழமை பெய்த மழை அளவு வருமாறு: சாத்தூத்க் 6 மி.மீ., ராஜபாளையம் 22 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூர் 62.5 மி.மீ., வத்திராயிருப்பு 8 மி.மீ., பிளவக்கல் அணை 18 மி.மீ., கோயிலாறு அணைப்பகுதியில் 27 மி.மீ. மழை பெய்துள்ளது.

**ராஜபாளையத்தில் பாலிதின் கவர்கள் பறிமுதல்**

ராஜபாளையம் நகர் பகுதியில் பாலிதின் பை, கவர் விற்பவர்களுக்கு நகராட்சி சார்பில் அபராதம் விதிக்கப்படுகிறது.

ராஜபாளையம் நகராட்சி ஆணையாளர் கு.தனலட்சுமி உத்தரவின் பேரில் சுகாதாரத்துறையினர் நகர் பகுதியில் உள்ள கடைகளில் தீவிர சோதனை நடத்தினர். அப்போது சுமார் 5 கிலோ பிளாஸ்டிக் பாலிதின் கவர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதை விற்ற கடைக்காரர்களுக்கு மொத்தம் ரூ பத்தாயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

**வன விலங்கு, இயற்கைப் பாதுகாப்பு குறித்து மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி: இயற்கைப் பாதுகாப்பு சங்கம் திட்டம்**

கோவையில் வன விலங்குகள், இயற்கை வளங்களை பாதுகாப்பது குறித்து மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு 3 நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடத்த இயற்கை பாதுகாப்புச் சங்கம் முடிவு செய்துள்ளது.

கோவை மாவட்டத்தில் மனிதர்கள் - வன விலங்குகள் இடையேயான மோதலைத் தவிர்க்கும் வகையில், காவல் துறை அதிகாரிகளுக்கு வன விலங்குகள், இயற்கை வளங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மூலமாக வன விலங்குகள் குறித்த புரிதலை ஏற்படுத்த இயற்கைப் பாதுகாப்பு சங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் வரும் நவம்பர் 24 முதல் 26-ம் தேதி வரை சித்தாபுதூர் மாநகராட்சிப் பள்ளியில் நடைபெற உள்ளது. இதுகுறித்து அதன் தலைவர் என்.ஐ.ஜலாலுதீன் கூறியது:

நாட்டில் உள்ள இயற்கை வளங்களையும், வன விலங்குகளையும் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை கடமையாகும். இந்தியாவில் சுமார் 350 வகையான பாலூட்டிகள், 1,224 வகை பறவைகள், 408 வகை

ஊர்வன உயிரினங்கள், 197 வகை நீர், நில வாழினங்கள், 2,546 வகை மீன்கள், சுமார் 15 ஆயிரத்துக்கும் அதிகமான பூக்கும் தாவரங்கள் என பல லட்சம் அரிய வகை உயிரினங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆசிரியர்கள் நாளைய தலைமுறையை உருவாக்கும் அரிய பணியில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்களுக்கு வன விலங்குகளையும், இயற்கை வளங்களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினால் அவர்கள் மூலம் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு இந்த தகவல்கள் சென்றடையும் என்பதால் இந்த சிறப்பு முகாமிற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3 நாள்கள் நடைபெறும் இந்த முகாமில் தினசரி 275 ஆசிரியர்கள் வீதம் சுமார் 830 ஆசிரியர்கள் பங்கேற்க உள்ளனர். முகாமில், பல்லுயிர் பெருக்கம், வன விலங்குகள், இயற்கை பாதுகாப்பு, தண்ணீர் வளம், இயற்கை வளங்கள் பாதுகாப்பு, சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு, புவி வெப்பமயமாதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சம்பந்தப்பட்ட துறைகளின் வல்லுநர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர் என்றார்.

**உடுமலையில் பரவலாக மழை**

உடுமலையில் புதன்கிழமை இரவு விடிய விடிய பெய்த மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உடுமலை, சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில், உடுமலையில் புதன்கிழமை இரவு பெய்த மழை காரணமாக கழுத்தறுத்தான் பள்ளம், தங்கம்மாள் ஓடை ஆகியவற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கருணாநிதி காலனி, சாதிக் நகர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்தது.

இதேபோல அமராவதி நகர், குமரலிங்கம், மடத்துக்குளம், பெதப்பம்பட்டி, குடிமங்கலம் ஆகிய பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

**மழை அளவு: உடுமலை-41 மி.மீ., திருமூர்த்தி அணை-58 மி.மீ., அமராவதி அணை-22 மி.மீ.**

வெள்ளக்கோவிலில் புதன்கிழமை இரவு விடிய விடிய மழை பெய்தது. வெள்ளக்கோவிலில் கடந்த மூன்று நாள்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது தூறல் மழை பெய்து வந்த நிலையில்,

புதன்கிழமை இரவு விடிய விடிய மழை பெய்தது. மானாவாரி நிலத்தில் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு இந்த மழை வரப்பிரசாதமாக உள்ளது.

**பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு முகாம்**

கோத்தகிரி தீயணைப்புத் துறை சார்பில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தீயணைப்புத் துறை மாவட்ட அலுவலர் இளங்கோ தலைமை வகித்தார். கோத்தகிரி நிலைய அலுவலர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.

இதில், தீ விபத்து மற்றும் பேரிடர் ஏற்படும்போது பொது மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டும், ஆபத்தில் உள்ளவர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்றும் விளக்கம் அளித்தனர். இந்த முகாமில் தீயணைப்பு வீரர்கள் தட்சிணாமூர்த்தி, சத்திவேல், கிருஷ்ணன்குட்டி, ராஜகுபேரன், ஸ்ரீதரன், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

**ஆடுகள் வளர்க்க சிறப்புப் பயிற்சி**

குன்னூர் அருகே உள்ள உபதலை ஊராட்சியில் ஆடுகள் வளர்க்க சிறப்பு பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

உபதலை ஊராட்சிக்கு உள்பட்ட பகுதியில் 33 கிராமங்களைச் சேர்ந்த 220 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சித் தலைவர் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு, அனைத்து கிராமங்களிலும் இருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து, கணவரால் கைவிடப்பட்டோர், விதவைகள், மாற்றுத் திறனாளின், வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்கள் எனப் பட்டியல் தயாரித்து, பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஆடுகளை வளர்ப்பது, பராமரிப்பது உள்ளிட்டவை குறித்த சிறப்புப் பயிற்சி முகாம் உபதலை கிராமத்திலுள்ள சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. முகாமிற்கு ஊராட்சித் தலைவர் வே.சிதம்பரம் தலைமை வகித்தார். கால்நடைத் துறை மருத்துவர்கள், ஊழியர்கள், ஆடு வளர்ப்பது தொடர்பாக விளக்கமளித்தனர்.

மேலும், பயிற்சி முகாம் நிறைவடைந்தவுடன் பயனாளிகளுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டன. கால்நடைத் துறை சார்பில் பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இறால் பண்ணையால் விவசாயம் பாதிப்பா?அதிகாரிகள் குழு ஆய்வு**

கும்மிடிப்பூண்டியை அடுத்த ஓபசமுத்திரம் பகுதியில் செயல்பட்டுவரும் இறால் பண்ணைகளால், அப்பகுதியில் விவசாயம் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டிவரும் நிலையில், பொன்னேரி கோட்டாட்சியர் நாராயணன் தலைமையிலான குழுவினர் புதன்கிழமை அங்கு ஆய்வு மேற்கொண்டனர்.

கடந்த 8 மாதங்களுக்கு முன்பாக, ஓபசமுத்திரம் பகுதியில் குடியிருப்புகளுக்கும், விவசாய நிலங்களுக்கும் மத்தியில் 4 இறால் பண்ணைகள் செயல்பட்டு வந்தன. இந்த இறால் பண்ணைகளால் விவசாயம் பாதிக்கப்படுவதோடு, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைகிறது. எனவே, அவற்றை மூட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் தொடர் போராட்டம் நடத்தினர்.

அதையடுத்து, 2 இறால் பண்ணைகள் மட்டும் மூடப்பட்டன. மேலும், இரண்டு இறால் பண்ணைகள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. இந்நிலையில், கடந்த ஜூன் மாதம் கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற ஜமாபந்தியின்போது இந்தப்பிரச்னை குறித்து அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர். இதனைத் தொடர்ந்து, ஜூலை மாதம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இரண்டு மாதத்தில் பண்ணைகளை அகற்றிக் கொள்வதாக இறால் பண்ணை உரிமையாளர்கள் உறுதி அளித்தனர்.

எனினும், இரண்டு மாதங்கள் கழிந்த பின்னரும் இறால் பண்ணைகள் மூடப்படவில்லை.

இதுகுறித்து பொன்னேரி கோட்டாட்சியர் நாராயணனிடம் கடந்த மாதம் 9-ஆம் தேதி அப்பகுதி மக்கள் முறையிட்டனர்.

இதனை தொடர்ந்து கோட்டாட்சியர் நாராயணன் தலைமையிலான குழுவினர் புதன்கிழமை அங்கு ஆய்வு மேற்கொண்டனர்.

மீன்வளத் துறையினர், வேளாண் துறையினர் இணைந்து ஆய்வறிக்கையை சமர்ப்பித்த பிறகுல அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என கோட்டாட்சியர் நாராயணன் தெரிவித்தார்.

## தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு:அபாய எச்சரிக்கை

ஒசூர் அருகே உள்ள தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஆற்றின் கரையோரம் வசிக்கும் கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி ஒசூர் வட்டாட்சியர் ரவிச்சந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி: கர்நாடகா மாநிலத்தில், தென் பெண்ணை ஆற்றின் நீர்ப்
பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், ஒசூர் அருகேயுள்ள கெலவரப்பள்ளி அணைக்கு, வினாடிக்கு 1900 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணையின் நீர்மட்டம் தற்போது 43.3 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 44.2 அடி என்பதால், பாதுகாப்பு கருதி அணையிலிருந்து வினாடிக்கு 1750 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

எனவே, ஒசூர் அருகேயுள்ள தொரப்பள்ளி, பாத்தகோட்டா, உலகம், காமன்தொட்டி உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதனால், கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கும் படி அதில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

## சேலம் மாவட்டத்தில் 286 மி.மீ. மழை பதிவு

சேலம் மாவட்டத்தில் 286 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்தநிலையில், சேலத்தில் புதன்கிழமை கருமேகங்கள் சூழ்ந்து மழை பெய்ய தொடங்கியது. இதனால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் பெரும் அவதிக்குள்ளாகினர்.

சேலம் மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்):

சங்ககிரி-50, மேட்டூர்-47, எடப்பாடி-40, ஏற்காடு-35, தம்மம்பட்டி-22, கெங்கவல்லி-20, வீரகனூர்-18, ஓமலூர், வாழப்பாடி-16, ஆத்தூர்-8 மில்லி மீட்டர் என மாவட்டத்தில் 286 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்தது.

சங்ககிரி அருகே 3 வீடுகள் சேதம்: சங்ககிரி வட்டாரத்தில் புதன்கிழமை பெய்த தொடர் மழையின் காரணமாக தேவூர் பகுதியில் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

தேவூர் அருகே உள்ள காவேரிப்பட்டி கிராமம் வட்டாரம்பாளையம் பகுதியைச் சேர்ந்த நல்லதம்பியின் குடிசை வீட்டின் மண்சுவர் கரைந்து ஒரு பகுதி இடிந்து விழுந்தது. கோனேரிப்பட்டி கிராமம் அருகே உள்ள வட்டாரம்பாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயி கணேசன் குடிசை வீட்டின் மேல்கூரை சரிந்து விழுந்தது. அதேபகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி மாதையன் என்பவரது வீட்டின் மண் சுவர் இடிந்து விழுந்தது.

**ஆலங்கட்டி மழை: பயிர்கள் சேதம்**

கொளத்தூரில் பெய்த ஆலங்கட்டி மழை காரணமாக வாழை மற்றும் பல வகை பயிர்கள் சேதம் அடைந்தன.

கொளத்தூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை இரவு பலத்த சூறைக்காற்றுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால், அந்தப் பகுதியில் கும்பாரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான வாழை, மக்காச்சோளம், சோளம், மிளகாய் பயிர்கள் சேதம் அடைந்தன. வாழை பலன் தரும் தருவாயில் சேதம் அடைந்ததால், தங்களுக்கு லட்சக் கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் புகார் கூறினார்கள்.

தமிழக வேளாண் துறை சேத மதிப்பை ஆய்வு செய்து சரியான இழப்பீட்டுத் தொகை தந்தால் மட்டுமே தாங்கள் விவசாயத்தை தொடந்து செய்ய முடியும் என்று விவசாயிகள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். கோடைகாலங்களில் வன விலங்குகள் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. மழைக் காலங்களில் இயற்கை சீற்றம் காரணமாக தங்களுக்கு சேதம் ஏற்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இதேபோல சேதம் ஏற்படுவதாகவும், இதுவரை அதற்கு இழப்பீடு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

**குரூப்-1 தேர்வு: நவ.8-இல்**

**சிறப்புப் பேருந்துகள் இயக்கம்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-1 தேர்வுக்கு சேலம், நாமக்கல்லில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி-1 (குரூப்-1) அடங்கிய பல்வேறு பதவிக்கான முதல்நிலைத் தேர்வு சேலம், நாமக்கல் மாவட்டங்களில் நவம்பர் 8 ஆம் தேதி நடைபெற உள்ளது.

எனவே, சேலம் மாவட்டத்தில் இருந்து அனைத்துத் தேர்வு மையங்களுக்கும் சிறப்புப் பேருந்துகள் மற்றும் கூடுதல் நடைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் இயக்க உள்ளது.

தேர்வு எழுத தேர்வு மையத்துக்குச் செல்ல உள்ள அனைத்து மாணவ, மாணவியரும் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்துள்ளார்.

**சிறார் தொழிலாளர்கள் 5 பேர் மீட்பு**

தலைவாசல் அருகே சிறுவாச்சூரில் விவசாயத் தோட்டத்தில் இருந்து 5 சிறார் தொழிலாளர்களை வியாழக்கிழமை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் மீட்டார்.

தலைவாசலை அடுத்துள்ள சிறுவாச்சூர் கிராமத்தில் பருத்தியை விவசாயிகள் அதிகம் பயிரிட்டு வருகின்றனர். இதற்கு மகரந்த சேர்க்கைக்காக தொழிலாளர்களை அதிகம் பயன்படுத்துவது வழக்கம். அதற்காக வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சிறார் தொழிலாளர்களை (மலைவாழ் மக்கள்) கொத்தடிமை போல் ஆண்டுக்கு பணம் பெற்றுக் கொண்டு பெற்றோர்கள் விட்டுச் செல்கின்றனர்.

இத்தகைய சிறார்களை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் மீட்டு, சேலம் குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

கடந்த ஆண்டு மட்டும் 3 பேர் மீட்கப்பட்டனர். இந்தநிலையில், கடந்த வாரம் 3 சிறுவர்களை மீட்டனர். இந்தநிலையில், சேலம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் உத்தரவின்படி, ஆத்தூர் கோட்டாட்சியர் சீ.ஜெயச்சந்திரன் மேற்பார்வையில், ஆத்தூர் துணை வட்டாட்சியர் அன்புச்செழியன், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் தேவகி ஆகியோர் வியாழக்கிழமை சிறுவாச்சூர் கிராமத்தில் அறிவழகன் (40)என்பவரது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த 3

சிறுமிகள், 2 சிறுவர்களை மீட்டு, சிறுவாச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனைக்கு உள்படுத்தி, சேலம் காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 3.41 அடி உயர்வு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் 3.41 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. புதன்கிழமை காலை நொடிக்கு 13,956 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை காலை நொடிக்கு 20,684 கன அடியாக அதிகரித்தது.

நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 66.95 அடியாக உயர்ந்தது. கடந்த இரு தினங்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 3.41 அடி உயர்ந்தது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. அணையின் நீர் இருப்பு 30.13 டி.எம்.சியாக இருந்தது.

## மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் ஆட்சியர் ஆய்வு

கரூர் மாவட்டத்தில் மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் ஆட்சியர் ச. ஜெயந்தி வியாழக்கிழமை காலை ஆய்வு மேற்கொண்டார். மேலும், தேங்கியுள்ள மழைநீரை அகற்ற அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கரூர் நகர்ப் பகுதியில் புதன்கிழமை இரவு முழுவதும் பெய்த பலத்த மழையால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது. மழையளவு 69 மி.மீ. எனப் பதிவாகியுள்ளது. கரூர் நகராட்சிக்குட்பட்ட ராஜாஜி தெருவில் உள்ள பாதாள சாக்கடையில் கசிவு ஏற்பட்டதை முன்னிட்டு சாலையில் திடீர் பள்ளம் ஏற்பட்டது. இதனால் வாங்கல்,நெரூர்,பாலம்பாள்புரம் உள்ளிட்ட

பகுதிகளுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்த ஆட்சியர் ச. ஜெயந்தி, கரூர் சட்டப்பேரவை உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி, அதிமுக மாவட்டச் செயலாளர் எம். ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று அந்த பள்ளத்தை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க நடவடிக்கை எடுத்தனர்.

மேலும், வாங்கபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி உள்ளிட்ட இடங்களில் தேங்கிய மழை நீரை பார்வையிட்ட ஆட்சியர் மழைநீரை அப்புறப்படுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, குப்புச்சிபாளையம் ஊராட்சி,சுக்காலியூர் மற்றும் தோரணக்கல்பட்டி ஆகிய பகுதிகளில் மழைநீர் அகற்றும் பணிகளைப் பார்வையிட்டார். தற்போது பெய்த பலத்த மழையின் காரணமாக மாயனூர் தடுப்பணைக்கு 25,000 கன அடி நீர் வந்தடைந்துள்ளது என்றார். ஆய்வின் போது கரூர் நகர்மன்றத் தலைவர் செல்வராஜ்,கரூர் ஒன்றியக்குழுத் தலைவர் எஸ். திருவிகா, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் வேலுசாமி, நகராட்சி பொறியாளர் புண்ணியமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அன்புசெல்வன், ஜெகதீசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தென்னை வணிக வளாகத்தில் 4 டன் தேங்காய் கொள்முதல்**

பட்டுக்கோட்டையை அடுத்த பொன்னவராயன்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் வேளாண் விற்பனைத் துறையினரால் வியாபாரிகளைக் கொண்டு தேங்காய், கொப்பரை மறைமுக ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

திருக்காட்டுப்பள்ளி, பந்தநல்லூர், பாபநாசம், அண்டமி, நாட்டுச்சாலை, வெண்டாக்கோட்டை, பெருமாள்கோவில், மல்லிப்பட்டினம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்ற மறைமுக ஏலத்தில் 4 டன் தேங்காயும், 750 கிலோ கொப்பரையும் கொள்முதல் செய்யப்பட்டது.

இதில் 1 கிலோ தேங்காய் அதிகபட்சமாக ரூ 18-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 16 க்கும் விற்பனையானது. கொப்பரை இரண்டாம் தரம் 1 கிலோ ரூ 65-க்கு விற்பனையானது என தஞ்சாவூர் வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆர். கலியராஜ், பட்டுக்கோட்டை வேளாண் வணிகத்திற்கான வேளாண் அலுவலர் எஸ். மாலதி ஆகியோர் தெரிவித்தனர்.

கொள்முதல் நடைபெற்றபோது விவசாயிகளிடம் கலந்துரையாடிய சென்னை தனியார் ஏற்றுமதி நிறுவனத்தினர் ஏற்றுமதி தரத்திற்கேற்றவாறு தேங்காய்

கொள்முதல் செய்வது குறித்து விவாதித்தனர். பட்டுக்கோட்டை பகுதியை தேங்காய், கொப்பரை ஏற்றுமதிக்கு அதிக வாய்ப்புள்ள பகுதியாக கருதுவதாக ஏற்றுமதி நிறுவனத்தினர் விவசாயிகளிடம் தெரிவித்தனர்.

கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேராவூரணி கற்பகத்தரு தென்னை உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகள், மல்லிப்பட்டினம் தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் கமால்பாட்சா, ஏனாதி தமிழரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நெல்லை மாவட்டத்தில் பிசான சாகுபடி பணி தீவிரம்**

திருநெல்வேலி மாவட்டத்தில், அணைகளிலிருந்து பாசனத்துக்கு வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்க இருப்பதால் தாமிரவருணி பாசனத்தில் பிசான சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.

தாமிரவருணி பாசனத்தில் பிசான பருவ சாகுபடி பணிகள் தொடங்கியுள்ளன. அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், சேரன்மகாதேவி, கடையம், ஆழ்வார்குறிச்சி, முக்கூடல் பகுதிகளில் விவசாயிகள் நாற்றுப் பாவும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வடகிழக்குப் பருவமழை தொடங்கி, தொடர்ந்து மழை பெய்து வருவதால் இம்மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இதனிடையே, பிசான பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 28, பாபநாசம் கீழ் அணை 14, சேர்வலாறு அணை 26, மணிமுத்தாறு அணை 18.6, கடனாநதி அணை 5, ராமநதி அணை 9, கருப்பாநதி அணை 41, குண்டாறு அணை 31, அடவிநயினார் அணை 15, நம்பியாறு அணை 6, கொடுமுடியாறு அணை 5. தென்காசி 38, செங்கோட்டை 25.2, ஆய்க்குடி 50.8, ஆலங்குளம் 55.4, ராதாபுரம் 6, நான்குனேரி 6, சிவகிரி 69.8, அம்பாசமுத்திரம் 10.5, சேரன்மகாதேவி 9, கன்னடியன் அணைக்கட்டு 9.

தூத்துக்குடி மாவட்டம்: தூத்துக்குடி 6.1, ஓட்டப்பிடாரம் 5, சாத்தான்குளம் 13.4, காயல்பட்டினம் 2, கோவில்பட்டி 1.

நீர்மட்டம்: 153 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணை நீர்மட்டம் 99.28 அடியாக இருந்தது. வெள்ளிக்கிழமை 100 அடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாபநாசம், அடவிநயினார், கடனாநதி, கருப்பாநதி, ராமநதி உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் தலா ஓரடியும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 3 அடியும் உயர்ந்துள்ளது. தொடர்ந்து அணைகளுக்கு நீர்வரத்து இருப்பதால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

பிற அணைகள்: பாபநாசம் அணை - 85.60 அடி, மணிமுத்தாறு அணை - 65.40 அடி, கடனாநதி அணை - 73 அடி, ராமநதி அணை - 72.50 அடி, கருப்பாநதி அணை - 71.52 அடி, குண்டாறு அணை - 36.10 அடி, அடவிநயினார் அணை - 104 அடி, வடக்குப் பச்சையாறு அணை - 25.50 அடி, நம்பியாறு அணை - 12.80 அடி, கொடுமுடியாறு அணை - 28 அடி.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 972.22 கனஅடியும், சேர்வலாறு அணைக்கு 450 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 336 கனஅடியும், கடனாநதி அணைக்கு 120 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 64 கனஅடியும், வடக்குப் பச்சையாறு அணைக்கு 104 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 70 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

**நிலவேம்புக் குடிநீர் விநியோகம்**

டெங்கு தடுப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக பாளையங்கோட்டையில் வியாழக்கிழமை பொதுமக்களுக்கு நிலவேம்புக் குடிநீர் வழங்கப்பட்டது.

டெங்கு தடுப்புக்காகவும், பருவமழையால் தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும் மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை, மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி நிர்வாகம் ஒருங்கிணைந்து மாவட்டம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் ஒருபகுதியாக நிலவேம்புக் குடிநீர் வழங்கும் முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

பாளையங்கோட்டை மண்டலத்தில் அம்பேத்கர் காலனியில் உள்ள அம்மா உணவகத்தில் நிலவேம்புக் குடிநீர் வழங்கும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. திருநெல்வேலி மாநகராட்சியின்பொது சுகாதாரத் துறை, மாவட்ட நிர்வாகத்தின் சுகாதாரப் பணிகள் துறை ஆகியவை இணைந்து நடத்திய இந்த முகாமை, மாநிலங்களவை உறுப்பினர் எஸ். முத்துக்கருப்பன், மேயர் இ. புவனேஸ்வரி ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

பள்ளிக் குழந்தைகளுக்கும், காலனி பொதுமக்களுக்கும் இலவசமாக நிலவேம்புக் குடிநீர் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், பாளையங்கோட்டை மண்டலத் தலைவர் எம்.சி. ராஜன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், அதிமுக நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

**காட்டுமயிலூரில் 56 மி.மீ மழை**

மாவட்டத்தில் அதிகபட்சமாக காட்டுமயிலூரில் 56 மில்லி மீட்டர் மழை வியாழக்கிழமை பதிவானது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வந்தபோதிலும் கடலூர் மாவட்டத்தில் போதுமான மழை பெய்யவில்லை. பருவமழை தொடங்கிய 2 நாள்களாக பரவலாக மழை பெய்த நிலையில், மற்ற நாள்களில் குறைந்த அளவே பெய்தது.

இந்நிலையில், புதன்கிழமை முதல் வியாழக்கிழமை அதிகாலை வரை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதில், காட்டுமயிலூரில் அதிகபட்சமாக 56 மில்லி மீட்டர் மழை பதிவானது.

மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பெய்த மழை விவரம் வருமாறு (மில்லி மீட்டரில்): சேத்தியாதோப்பு 47, வேப்பூர் 34, சிதம்பரம் 19.8, அண்ணாமலை நகர் 19.4, லக்கூர் 19.2, கடலூர் 15.9, மேல்மாத்தூர் 13, வானமாதேவி, குப்பநத்தம் தலா 12, காட்டுமன்னார்கோவில், தொழுதூர் தலா 11, பெலாந்துறை 9, லால்பேட்டை 8, புவனகிரி 6, விருத்தாசலம் 5, கொத்தவாச்சேரி 4, பண்ருட்டி 1.1.

**இயந்திர நெல் நடவு: விவசாயிகளுக்குப் பயிற்சி**

ஜக்காம்பேட்டை கிராமத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செயல்விளக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

சக்கரவர்த்தி என்ற விவசாயி நிலத்தில் நடைபெற்ற முகாமில், வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் பேசியது: விவசாயப் பணிகளுக்கு ஆள்பற்றாக்குறை உள்ளது. இதனை தவிர்க்கவும், குறிப்பிட்ட பருவத்திற்குள் நடவுப் பணிகளை முடித்திடவும் இயந்திர நெல் நடவுத் திட்டம் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இயந்திர நெல் நடவுக்கு ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ விதைகள் போதுமானது. ஒரே நாளில் 8 முதல் 10 ஏக்கர் வரை நடவு செய்ய முடிவதால், விவசாயிகளுக்கு சேமிப்பு ஏற்படுவதோடு, மகசூல் 20 சதவீதம் வரை அதிகரிக்கும். எனவே விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் இயந்திர நெல் நடவு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும். இதற்காக விவசாயிகளுக்கு அரசு மானியம் ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது என்றார்.

வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர் விஜயலட்சுமி, விவசாயிகள் சங்கத் தலைவர் ராஜேந்திரன் மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

### உள்நாட்டு உற்பத்தி மூலம் ராணுவ பட்ஜெட்டை 50% குறைக்க வேண்டும்



புதுடெல்லி: உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தால், அடுத்த 10 ஆண்டுகளில் ராணுவ பட்ஜெட்டை 50 சதவீதம் குறைக்க முடியும்'' என இம்பிரின்ட் இந்தியா திட்ட தொடக்க நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசினார். புதிய

தொழில்நுட்பத்தை கண்டறியும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்காக ஐ.ஐ.டி மற்றும் ஐஐஎஸ்சி இணைந்து மேற்கொள்ளும் இம்பிரின்ட் இந்தியா திட்டம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது: ராணுவ தளவாடங்களை நமது நாடு அதிகளவில் இறக்குமதி செய்கிறது. இந்த உற்பத்தி துறையில் நமது அறிவியல் நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். நமது மனிதவளத்தை இத்துறையில் பயன்படுத்தினால் குறைந்த செலவில் ராணுவ தளவாடங்களை தயாரிக்க முடியும். பின் சர்வதேச சந்தையாக இந்தியா மாறிவிடும். இதற்கு நமது ஐஐடி மற்றும் ஐஐஎஸ்சி போன்ற அறிவியல் நிறுவனங்கள் இப்போது முடிவு செய்தால், அடுத்த 10 ஆண்டுகளில் நமது ராணுவ பட்ஜெட்டை 50 சதவீதமா குறைத்து விடலாம். இதன் மூலம் மிச்சமாகும் பணத்தை கல்விக்கு செலவிடலாம். இதன் மூலம் தற்சார்பு நாடாக இந்தியா மாறும்.

சமூகம் தொழில்நுட்பத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆகையால் குறைந்த செலவில் வாங்க கூடிய தொழில்நுட்பம் அவசியம். தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்காத நூற்றாண்டு இனி இருக்க முடியாது. வெளிநாட்டு தொழில்நுட்பங்களை நாம் சார்ந்திருக்கும் வரை, பிரச்னைகள் தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். அறிவியல் பொதுவானதாக இருந்தாலும், தொழில்நுட்பம் உள்நாடாக இருக்க வேண்டியது அவசியம். ஏற்கனவே உள்ள வலுவான தொழில்நுட்பங்களை ஒற்றிணைத்து, புதிய தொழில்நுட்பத்தை எப்படி உருவாக்குவது என நாம் சிந்திக்க வேண்டும். சவால்கள் கோடிக்கணக்கில் உள்ளன. அதே நேரத்தில் சிந்திக்கும் திறனுள்ள மனிதர்களும் கோடிக்கணக்கில் உள்ளனர். இவர்களின் மனங்களை, புதுமையை கண்டுபிடிப்பதற்காக ஒன்றிணைக்க வேண்டும். அதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தாதவரை, மனிதமனங்கள் பயனற்றதாக இருக்கும். ஒருவரின் கனவு நனவாக வேண்டுமானால், புதுமைதான் அதற்கு சாவி. அதனால் புதுமையை கண்டுபிடிப்பதில் நமது அறிவியல் நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். புவி வெப்பமயமாதலைக் கூட சந்தை வாய்ப்பாக மாற்ற முடிவு செய்துவிட்டார்கள். அதனால் எதிர்கால இந்திய சமுதாயத்தினருக்கு மலிவான மற்றும் தரமான புதிய தொழில்நுட்பத்தை நாம் கொடுக்க வேண்டும்.

நம்மால் இதை செய்ய முடிந்தால், கோடிக்கணக்கான மக்கள் பயனடைவர். **பிரணாப் ஒரு பல்கலைக்கழகம்** நிகழ்ச்சியில் மோடி பேசுகையில், ‘‘நமது ஜனாதிபதி நடமாடும் பல்கலைக்கழகம். அவர் அறிவுக்கடல். எந்த ஒரு சிக்கலான விஷயத்தையும், அவர் தனது அனுபவ அறிவால் உடனே புரியவைத்து விடுவார். பிரதமராக இருப்பதால் என்ன பயன் என்று யாராவது என்னிடம் கேட்டால், ஜனாதிபதியுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு என்பேன். பல்கலைக்கழக துணைவேந்தர்கள், ஐஐடி தலைவர்களுக்கு ஜனாதிபதியை நேரடியாக தொடர்பு கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவரது வழிகாட்டுதலின்படி நீங்கள் பணியாற்ற வேண்டும். அப்படி நடந்தால், நாடு நிச்சயம் பலனடையும்’’ என் புகழ்ந்து பேசினார்.**புதுமையை உருவாக்கும் நெட்வொர்க் தேவை** நிகழ்ச்சியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பேசுகையில், ‘‘தொழில் முனைவோரில் இந்திய இளைஞர்கள் யாருக்கும் குறைவானவர்கள் அல்ல. புதுமையை உருவாக்கும் ஆராய்ச்சி நெட்வொர்க்கை உயர் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் ஏற்படுத்த வேண்டும். ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்னாட் ஸ்டேன்ட் அப் இந்தியா பிரசாரத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. உலகளவில் இந்தியா வேகமாக வளரும் இடமாக உள்ளது. மத்திய பல்கலைக்கழகங்களும், என்.ஐ.டிக்களும் குறைந்தது 5 கிராமங்களை தத்தெடுத்து நவீன கிராமங்களாக மாற்ற வேண்டும் என கூறியுள்ளேன். 114 மத்திய கல்வி நிறுவனங்களும், தத்தெடுக்கும் கிராமத்தின் பிரச்னையை கண்டறிந்து மக்களின் வாழ்க்ை◌கை தரத்தை உயர்த்த வேண்டும்’’ என்றார்.

**மளமளவென உயர்கிறது மேட்டூர் அணையின் நீர்மட்டம்: ஒரே நாளில் 4 அடி அதிகரிப்பு**



மேட்டூர்: கர்நாடக மாநிலத்தின் காவிரி மீன்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ள நிலையில், அதன் நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்ந்துள்ளது. காவிரியின் துணை நதிகளான, பாலாறு, தொப்பையாறு, சின்னாறு ஆகிய சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை கொட்டுவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. நேற்று காலை வினாடிக்கு 20,684 கனஅடியாக இருந்த நீர் வரத்து, இன்று 40,261 கனஅடியாக உயர்ந்துள்ளது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென ஒரே நாளில் 4 அடி உயர்ந்துள்ளது. கடந்த 3 நாட்களில் 7 அடி அதிகரித்துள்ளது. 120 அடி உயரம் வரை தேக்கும் வசதி கொண்ட மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது, 70.96 அடியாக உள்ளது. இதனிடையே டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையில் இருந்து விடப்படும் நீரின் அளவு வினாடிக்கு 500 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது**




ஈரோடு அன்னை சத்யா நகர் குடியிருப்பில் வீட்டுக்குள் வெள்ளம் புகுந்ததால் விடிய விடிய தூங்காமல் தவித்த சிறுவர்கள். வடகிழக்கு பருவமழை கடந்த 28ம் தேதி தொடங்கி தமிழக முழுவதும் பரவலாக பெய்து வருகிறது. இதனால், தென்மாவட்டங்களின் அணைகள், ஏரிகள் நிரம்பி வருகின்றன.ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் விடிய மழை கொட்டி தீர்த்தது. இதில் பிச்சைக்காரன்பள்ளம் ஓடை, சுண்ணாம்பு ஓடை, பெரும்பள்ளம் ஆகிய ஓடைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் ஓடைகளை ஒட்டியுள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்தது. 10 ஆயிரம் வீடுகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பொதுமக்கள் தங்களின் உடமைகளை இழந்து தவிக்கின்றனர். ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் பயிர்கள் சேதமடைந்துள்ளது. திருப்பூரில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று காலை 7 மணி வரை மழை கொட்டித்தீர்த்தது. தாழ்வான குடியிருப்புகளில் மழைநீர் புகுந்தது. நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழைக்கு ஆசிரியர் குடியிருப்பு மற்றும் கொளத்துகாடு பகுதிகளில் உள்ள 150 வீடுகளில் வெள்ளம் புகுந்தது. கனமழையால், பள்ளிபாளையத்தில் உள்ள கலியூர் ஏரி நிரம்பியது. திருச்சி, கரூர், அரியலூர் மாவட்டத்திலும் மழையால் பாதிப்பு ஏற்பட்டது. திருவாரூர் மாவட்டத்தில் ஒருவரும், பெரம்பலூர் மாவட்டத்தில் ஒருவரும் மின்னல் தாக்கி இறந்துள்ளனர். நெல்லை கடைநல்லூரில் கால்வாயில் நேற்று முன்தினம் இரவில் தவறி விழுந்து, ஓய்வு பெற்ற தலைமை காவலர் பிச்சையா (70) என்பவர் பலியானார்.

காவிரியில் நீர்வரத்து 48,000 கனஅடி

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால், ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் மதியம் வினாடிக்கு 16,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து, தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் நேற்று மாலை 5 மணி நிலவரப்படி 48,000 கனஅடியாக உயர்ந்தது. மழை காரணமாக மெயின் அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் நேற்று 2வது நாளாக தடை விதிக்கப்பட்டது. மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 13,956 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை 5 மணி நிலவரப்படி 20,684 கனஅடியாக அதிகரித்தது. நீர்மட்டம் 66.95 அடியாகவும், நீர் இருப்பு 30.13 டிஎம்சியாகவும் உள்ளது.

**மேல் அடுக்கில் புதிய காற்றுசுழற்சி**




சென்னை : தமிழகத்தில் கடந்த வாரம் தொடங்கிய வட கிழக்கு பருவமழை தொடங்கியது. வளி மண்டல மேல் அடுக்கில் அப்போதைக்கு அப்போது ஏற்படும் காற்று சுழற்சியால் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக, நேற்று கரூரில் 150 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், தென் மேற்கு வங்கக் கடலில் மீண்டும் வளி மண்டல மேல் அடுக்கில் புதிய காற்று சுழற்சி

ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யும் என வானிைல ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**ஒரு குவிண்டால் பருப்புக்கு குறைந்தபட்ச ஆதார விலை 250 அதிகரிப்பு**



புதுடெல்லி: பருப்புக்கான குறைந்தபட்ச ஆதார விலையை குவிண்டாலுக்கு 250 உயர்த்தி மத்திய அரசு அறிவித்துள்ளது. பருப்பு விலை அதிகரித்துள்ள நிலையில், பொருளாதார விவகாரங்களுக்கான கேபினட் குழு கூட்டம் நேற்று நடந்தது. கூட்டம் முடிந்த பிறகு, மத்திய அமைச்சர் பியுஷ் கோயல் நிருபர்களிடம் கூறியதாவது: இறக்குமதியை குறைத்து உள்ளூர் சாகுபடியை பயன்படுத்தும் வகையில், நடப்பு பருவத்துக்கான குறைந்த பட்ச ஆதார விலை பருப்பு வகைளுக்கு 250 உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி மசூர் பருப்புக்கு குவிண்டால் 3,325 ஆகவும், கடலைப்பருப்பு குவிண்டாலுக்கு 3,425ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது சுமார் 8 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுபோல், கோதுமைக்கான குறைந்த பட்ச ஆதார விலை 75 அதிகரித்து 1,525ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பார்லிக்கு 75 அதிகரித்து 1,225ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது என்றார். பருப்பு விலை வரலாறு காணாத உச்சத்தை தொட்டதை தொடர்ந்து மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுதவிர நடப்பு ரபி பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து இருப்பு வைக்கவும் முடிவு செய்துள்ளது. இந்த சூழ்நிலையில் குறைந்தபட்ச ஆதார விலை உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**உடனுக்குடன் கொள்முதல் செய்யாததால் மருத்துவக்குடியில் 1,500 மூட்டை நெல் தேக்கம்**

கும்பகோணம், : கும்பகோணம் அருகே உள்ள மருத்துவக்குடியில் உள்ள நேரடி கொள்முதல் நிலையத்தில் உடனுக்குடன் கொள்முதல் செய்யாததால் 1,500 மூட்டை நெல்கள் தேங்கியுள்ளது. இரவு பகலாக விவசாயிகள் காவல்காத்து வருகின்றனர். தஞ்சை மாவட்டம் கும்பகோணம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நெல்லில் ஈரப்பதம் இருப்பதால் கொள்முதல் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காயவைத்து நெல் மூட்டைகளை கொடுத்தால் பணம் இல்லையென கூறுகின்றனர். கும்பகோணம் அருகே உள்ள மருத்துவக்குடியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நேரடி கொள்முதல் நிலையம் உள்ளது. மருத்துவக்குடி, சுவாமிமலை, ஆதனூர், புள்ள பூதங்குடி, திருவைகாவூர், மாஞ்சேரி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு இந்த நெல் கொள்முதல் நிலையம் தான். இப்பகுதியில் 1,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். இந்த இடத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தான் நெல் கொள்முதல் நிலையத்தில் களம் அமைக்கப்பட்டது. விவசாயிகள் அதிகம் இருப்பதால் இருப்பதால் நெல் மூட்டைகளை வைப்பதற்கு இடம் இல்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து விவசாயி சுவாமி மலைராஜ் கூறுகையில், நான் 400 நெல் மூட்டைகளை கொண்டு வந்து 15 நாட்களாக காத்திருக்கேன். நெல் மூட்டைகளை எடை போடுவதற்கு சென்றால் ஈரமாக இருக்கிறது என்கின்றனர். காயவைத்து கொண்டு சென்றால் பணம் இல்லையென திருப்பி அனுப்பிவிடுகின்றனர். மீண்டும் பணம் வந்துள்ளது தகவலறிந்து நெல் மூட்டைகளை கொண்டு சென்றால் மறுபடியும் ஈரமாக உள்ளது என்கின்றனர். இதனால் 1,500 மூட்டை நெல்கள் தேங்கியுள்ளது. மேலும் போதுமான இடம் இல்லாததால் சாலை, தெருக்களில் நெல்களை காயவைக்கும் நிலை உள்ளது. நெல் மூட்டைகள் மழையில் நனைந்து காயவைப்பதால் நெல் மணிகள் பதறாகி எடை நிற்காமல் இருக்கும். கடந்த 15 நாட்களாக நெல் கொள்முதல் நிலைய அலுவலர்கள் காலை 11 மணிக்கு வந்து விட்டு 3 மணிக்கு சென்று விடுகின்றனர். நெல் மூட்டைகள் தேங்கி இருப்பதால்

இரவு பகல் பாராது அங்கேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு நாளைக்கு 500 மூட்டைகள் தான் கொள்முதல் செய்கின்றனர். ஒரு நாளைக்கு 1 மூட்டைக்கு ரூ.25ம், மூட்டைக்கு ஒரு கிலோ எடை அதிகரித்தும் நெல்மணிகளை எடுப்பதால் அவர்களுக்கு ரூ.20 ஆயிரம் வரை கிடைக்கிறது. இதே நிலை நீடித்தால் நாங்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகும் என்றார்.

காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் சுவாமிமலை விமலநாதன் கூறுகையில், இந்த பகுதியில் குறுவை நடவை மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி குறுவை 1000 ஏக்கரில் செய்துள்ளனர். அறுவடை முடிந்த நேரத்தில் மழை காலம் என்பதால் 20 லிருந்து 23 சதவீதம் வரை ஈரப்பதம் விலக்கு அளிக்க வேண்டும். ஈரப்பதம் உள்ள நெல்லை நவீன அரிசி ஆலைகளில் உள்ள உலர் இயந்திரகளின் மூலம் காய வைத்து கொள்ள வேண்டும். உலர் களங்கள் இல்லாத நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல்லை காயவைக்க மாற்று ஏற்பாடு அரசு செய்துதர வேண்டும் என்றார்.

## 6 ஆயிரம் எக்டேரில் நேரடி நெல் விதைப்பு

கொள்ளிடம், : கொள்ளிடம் வட்டாரத்தில் 6 ஆயிரம் எக்டேரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது என்று வேளாண் அலுவலர் தெரிவித்தார். நாகை மாவட்டம் கொள்ளிடம் வட்டார வேளாண் அலுவலர் முருகராஜ் நேற்று கூறுகையில், கொள்ளிடம் பகுதியில் வருடந்தோறும் சம்பா மற்றும் தாளடி நெல் பயிரிடும் பரப்பளவு 11 ஆயிரத்து 300 எக்டேர். கொள்ளிடம் பகுதியில் நிலத்தடி நீர்மற்றும் வாய்க்கால் பாசனத்தை பயன்படுத்தி நடப்பு சம்பா சாகுபடிக்கு 6 ஆயிரம் எக்டேரில் நேரடி நெல் விதைப்பு பயிரிடப்பட்டுள்ளது. 4 ஆயிரத்து 155 எக்டேர் நிலத்தில் நடவு செய்து பயிரிடப்பட்டது. மொத்தமுள்ள 11 ஆயிரத்து 300 எக்டேர் நிலப்பரப்பில் 10 ஆயிரத்து 155 எக்டேர் நிலப்பரப்பில் சம்பா பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏ.டி.டி.38, ஆதாரநிலை எண்-2, பி.பி.டி, ஏ.டி.டி-46, சொர்னாசப் ஆகிய ரக நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. இவ்வாறு முருகராஜ் தெரிவித்தார்.

**வங்க கடலில் மேல் அடுக்கு சுழற்சி: தென் மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**



சென்னை: சென்னை வானிலை மைய இயக்குனர் ரமணன் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:–நேற்று அரபிக்கடலில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற்று தாழ்வு மண்டலமாக மாறி உள்ளது. அது மத்திய அரபிக்கடலில் நிலை கொண்டுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நமது தீப கற்பத்தை விட்டு நகர்ந்து செல்வதால் மழை குறையும்.இந்த சூழலில் ஒரு புதிய மேலடுக்கு சுழற்சி தென்மேற்கு வங்க கடலில் உதயமாகி உள்ளது. இதனால் 24 மணி நேரத்தில் தென் மாவட்டங்களின் அநேக இடங்களிலும், வட மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யும்.தென் கடலோர மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் கன மழை இருக்கக்கூடும். இந்த நிகழ்வானது மேற்கு நோக்கி நகரும் நாட்களில் கடலோர மாவட்டங்களில் மழை அதிகரிக்கும்.

கடந்த 24 மணி நேரத்தில் கரூர், பரமத்தியில் 15 செ.மீ. மழை பெய்துள்ளது. ஈரோடு 14 செ.மீ., பவானி காமாட்சிபுரம் 12 செ.மீ., சித்தம்பட்டி 11 செ.மீ., பெருந்துறை, சிவகங்கை தலா 9 செ.மீ., பொள்ளாச்சி 8 செ.மீ. அரவக்குறிச்சி,

கரூர், பேரையூர் தலா 7 செ.மீட்டர்.சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த புறாக்களுக்கு உணவுடன் கருத்தடை மாத்திரை_: சிங்கப்பூர் அரசு சோதனை முயற்சி**

சிங்கப்பூரில் அதிகரித்து வரும் புறாக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வகையில், சோதனை முயற்சியாக தீவனத் துடன் கருத்தடை மாத்திரைகளை அந்நாட்டு அரசு வழங்கி வருகிறது.

சிங்கப்பூர் வேளாண்-உணவு மற்றும் விலங்குகள் ஆணையம் (ஏவிஏ) சார்பில், பால்மர் சாலையில் கடந்த அக்டோபர் மாதம் தொடங்கிய இந்த சோதனை முடிய ஓராண்டாகும். இதன்படி, சோளத்தை அடிப்படையாகக் கொண்ட தீவனத்துடன் நைகார்பைசன் என்ற மருந்து கலந்து புறாக்களுக்கு வழங்கப்படும்.

இந்த மருந்தை பெண் புறாக்கள் சாப்பிடும்போது அவற்றுக்கு முட்டை உற்பத்தியாவது தடைபடும். அப்படியே முட்டையிட்டாலும் அவை குஞ்சு பொறிக்காது. அதேநேரம் இந்த மாத்திரை கலக்கப்பட்ட உணவை தவறுதலாக பிற விலங்குகளோ மனிதர்களோ சாப்பிட்டால் எந்த விளைவும் ஏற்படாது என்று ஏவிஏ தெரிவித்துள் ளது.

இந்த சோதனை வெற்றி அடைந்தால் நாட்டின் பிற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என் ஏவிஏ தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரின் பால்மர் சாலையில் சமீப காலமாக புறாக்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. கடந்த 2013-ம் ஆண்டு 200 ஆக இருந்த இதன் எண்ணிக்கை இப்போது 400 ஆக அதிகரித்துள்ளது. இதனால் அப்பகுதியின் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது.

பொதுமக்கள் புறாக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதே இனப்பெருக்கம் அதிகரிப்பதற்குக் காரணமாக விளங்குகிறது. எனவே, உணவு வழங்குவோர் மீது ஏவிஏ நடவடிக்கை எடுத்து வருகிறது.

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## பருப்பு, கோதுமைக்கான கொள்முதல் விலை உயர்வு: மத்திய மந்திரிசபை ஒப்புதல்



புதுடெல்லி, நவ.6-

மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில், குறுவை பருவ மசூர் பருப்பு, கொண்டை கடலை, கோதுமை, பார்லி, கடுகு விதை, சூரிய காந்தி விதை ஆகியவற்றுக்கான கொள்முதல் விலையை உயர்த்த ஒப்புதல்

அளிக்கப்பட்டது.

இதுபற்றி, கூட்டம் முடிவடைந்த பிறகு, மத்திய மின்துறை மந்திரி பியுஷ் கோயல் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

மசூர் பருப்பின் கொள்முதல் விலை, குவிண்டாலுக்கு ரூ.250 உயர்த்தப்பட்டுள்ளது. அதன் விலை குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரத்து 325 ஆக உயரும். கொண்டை கடலையின் கொள்முதல் விலையும், குவிண்டாலுக்கு ரூ.250 உயர்த்தப்பட்டுள்ளது. இது, 8 சதவீத விலை உயர்வாகும்.


மேலும், இவற்றின் உயர்த்தப்பட்ட கொள்முதல் விலையுடன், குவிண்டாலுக்கு ரூ.75 கூடுதல் போனஸாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.75 உயர்த்தப்பட்டுள்ளது. அதன் விலை, குவிண்டாலுக்கு ரூ.1,525 ஆக உயரும்.

பார்லியின் கொள்முதல் விலை, குவிண்டாலுக்கு ரூ.75 உயர்த்தப்பட்டுள்ளது.

ரேஷன் கடைகள் மூலமாக வினியோகிக்க கூடுதலாக 27 லட்சம் டன் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறு பியுஷ் கோயல் கூறினார்.

## 24 மணி நேரத்தில் 4 விவசாயிகள் தற்கொலை: ஒடிசாவில் தொடரும் சோகம்



புவனேஸ்வர், நவ. 5-

ஒடிசா மாநிலத்தில் நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது தொடர்கதையாகி வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 4 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தற்கொலை செய்து கொண்டவர்களில் 3 பேர் ஒடிசாவின் கடலோர மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள், ஒருவர் நுபடா மாவட்டத்தை சேர்ந்தவர். 4 விவசாயிகளும், வெறும் வயிற்றில் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.இந்நிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று ஆளும் கட்சி எம்.எல்.ஏ-க்களை முதல்-மந்திரி நவீன் பட்நாயக் வலியுறுத்தியுள்ளார். முன்னதாக, ஒடிசாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 1,000 கோடி ரூபாய்க்கு சலுகைகளை முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்வு



மேட்டூர், நவ 6–

தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த 4 நாட்களாக தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு 16 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது.

நேற்று காலை இது அதிகரித்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது. நேற்று மாலை 45 ஆயிரம் கன அடிதண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. காவிரி கரையை தொட்டபடி வெள்ளம் சீறிபாய்ந்து செல்கிறது. ஒகேனக்கல் மெயின் அருவி, ஐந்து அருவி, சினிபால்ஸ் அருவிகளில் வெள்ளம் நுங்கும் நுரையுமாக ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதைக்கு மேல் சுமார் 2 அடி உயரத்திற்கு தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் அருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் பரிசல் சவாரிக்கு விதிக்கப்பட்டு இருந்த தடை தொடர்ந்து நீடித்து வருகிறது. மெயின் அருவிக்கு செல்லும் நுழைவு வாயில் பூட்டப்பட்டு எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் போலீசார், ஊர்காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், கர்நாடக அணைகளில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளதாலும், காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் காவிரி கரையோரத்தில் வசித்து வரும் பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு வருவாய்துறையினர் வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள்.

ஒகேனக்கல் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால் எப்போதும் பரபரப்பாக காணப்படும் பரிசல் துறை, அருவிகள், நடைபாதைகள் சுற்றுலா பயணிகள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி காணப்படுகிறது. காவிரி ஆற்றில் வரும் நீரின் அளவை ஒகேனக்கல் பிலிகுண்டுலுவில் பொது பணித்துறை அதிகாரிகள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள்.

தொடர் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் 13 ஆயிரத்து 956 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து நேற்று காலை 20 ஆயிரத்து 684 கன அடியாக அதிகரித்தது.

இன்று காலை 40 ஆயிரத்து 261 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 66.95 அடியாக இருந்தது. இன்று காலை இது 70.96 அடியாக உயர்ந்து உள்ளது.

ஒரே நாளில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 4 அடி உயர்ந்து உள்ளது குறிப்பிடத்தக்கது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு ஆயிரம் கன அடிவீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் தண்ணீர் திறப்பு 500 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## பருப்பு, கோதுமைக்கான கொள்முதல் விலை உயர்வு மத்திய மந்திரிசபை ஒப்புதல்



புதுடெல்லி,

குறுவை பருவ பருப்பு, கோதுமைக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியது. இதற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

கொள்முதல் விலை

மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில், குறுவை பருவ மசூர் பருப்பு, கொண்டை கடலை, கோதுமை, பார்லி, கடுகு விதை, சூரிய காந்தி விதை ஆகியவற்றுக்கான கொள்முதல் விலையை உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுபற்றி, கூட்டம் முடிவடைந்த பிறகு, மத்திய மின்துறை மந்திரி பியுஷ் கோயல் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:–

நடப்பு குறுவை பருவத்தில் சாகுபடியை ஊக்குவிக்கவும், இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்கவும் கொள்முதல் விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பருப்பு

அதன்படி, மசூர் பருப்பின் கொள்முதல் விலை, குவிண்டாலுக்கு ரூ.250 உயர்த்தப்பட்டுள்ளது. அதன் விலை குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரத்து 325 ஆக உயரும். கொண்டை கடலையின் கொள்முதல் விலையும், குவிண்டாலுக்கு ரூ.250 உயர்த்தப்பட்டுள்ளது. இது, 8 சதவீத விலை உயர்வாகும்.

மேலும், இவற்றின் உயர்த்தப்பட்ட கொள்முதல் விலையுடன், குவிண்டாலுக்கு ரூ.75 கூடுதல் போனஸாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கோதுமை

கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.75 உயர்த்தப்பட்டுள்ளது. அதன் விலை, குவிண்டாலுக்கு ரூ.1,525 ஆக உயரும்.

பார்லியின் கொள்முதல் விலை, குவிண்டாலுக்கு ரூ.75 உயர்த்தப்பட்டுள்ளது.

கூடுதல் உணவு தானியம் ஒதுக்கீடு

ரேஷன் கடைகள் மூலமாக வினியோகிக்க கூடுதலாக 27 லட்சம் டன் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறு பியுஷ் கோயல் கூறினார்.

## வங்கக்கடலில் புதிய மேலடுக்கு சுழற்சி உருவானது தென் மாவட்டங்களில் அநேக இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு



சென்னை

வங்கக்கடலில் புதிய மேலடுக்கு சுழற்சி உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய அதிகாரிகள் கூறியதாவது:-

புதிய மேலடுக்கு சுழற்சி

அரபிக்கடலில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தீவிரம் அடைந்து தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. அதிக பட்சமாக கரூர் மாவட்டம் பரமத்தியில் 15 செ.மீ. மழை பெய்துள்ளது.

இந்த நிலையில் தென் மேற்கு வங்கக்கடலில் புதிய மேலடுக்கு சுழற்சி உருவாகி உள்ளது. இதன் காரணமாக அடுத்த 24 மணிநேரத்தில் (வெள்ளிக்கிழமை) தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யும். வட மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் வானம் மேக மூட்டமாக காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசாக மழை பெய்யும்.

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

15 செ.மீ. மழை கே.பரமத்தி 15 செ.மீ., ஈரோடு 14 செ.மீ., சாத்தான்குளம் 13 செ.மீ., பவானி, காமாட்சிபுரம் தலா 12 செ.மீ., சித்தம்பட்டி 11 செ.மீ., பெருந்துறை , சிவகங்கை தலா 9 செ.மீ., பொள்ளாச்சி, குமாரப்பாளையம் தலா 8 செ.மீ., அரவாக்குறிச்சி, பேரையூர், நன்னிலம், சிவகிரி, கரூர், சத்திரப்பட்டி, சங்கரன்கோவில், வாடிப்பட்டி தலா 7 செ.மீ., பெரியநாயக்கன்பாளையம், திருச்சி விமானநிலையம், வேடசந்தூர், பெரம்பலூர் தலா 6 செ.மீ., சோழவந்தான், அன்னூர், கொடுமுடி, செட்டிக்குளம், பரமக்குடி, சின்னக்கள்ளார், ஆய்க்குடி, மானாமதுரை, நத்தம், ஊட்டி, சங்ககிரி, மணப்பாறை, மருங்காபுரி, மேட்டூர், சேத்தியாதோப்பு, மேட்டுப்பட்டி, நடுவட்டம், வால்பாறை, பெரியாறு, பரமத்திவேலூர், குந்தாபாலம் தலா 5 செ.மீ., மாயனூர், நாமக்கல், கடவூர், அறந்தாங்கி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி, ராமேஸ்வரம், திருப்புவனம், பாலக்கோடு, பஞ்சப்பட்டி, பழனி, திருவாரூர், தென்காசி, திருச்சி நகரம், கொடைக்கானல், ஏற்காடு தலா 4 செ.மீ., பென்னாகரம்
தாத்தையங்கார் பேட்டை, கோபிச்செட்டிபாளையம், கூடலூர், பென்னாகரம், மதுரையின் தெற்கு பகுதி, ராமேசுவரம், கெய்ட்டி, ஒகேனக்கல், ஆர்.எஸ்.மங்கலம், மேலூர், தோகைமலை, செண்டாமங்கலம், வெம்பாவூர், தாளவாடி, இளையான்குடி, பாபநாசம், திருச்செங்கோடு, பாடலூர், முசிறி, பீளமேடு, புள்ளம்பாடி, பாம்பன் தலா 3 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் செங்கோட்டை, கோவை உள்பட 50-க்கும் மேற்பட்ட இடங்களில் தலா 2 செ.மீ. மழையும், ராசிபுரம், நாகப்பட்டினம் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட இடங்களில் தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

## விவசாய உயர் தொழில்நுட்பத்தை அறிந்து வர 40 தமிழக விவசாயிகள் சீனா, இஸ்ரேல் செல்கிறார்கள் ஜெயலலிதா உத்தரவின்பேரில் அரசு ஏற்பாடு

சென்னை,

விவசாய உயர் தொழில்நுட்பத்தை அறிந்து வர தமிழக விவசாயிகள் 40 பேர் சீனா, இஸ்ரேல் செல்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்து வருகிறது.

ஜெயலலிதா உத்தரவு

முதல்–அமைச்சர் ஜெயலலிதா தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற அதே அக்கறையுடன் விவசாயத்தை மேம்படுத்துவதிலும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்.

நம்மிடம் இருக்கும் தொழில் நுட்பத்தை விட இஸ்ரேல் போன்ற வெளிநாடுகளில் உயரிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பாசனநீரை சிக்கனமாக பாய்ச்சி அதிக மகசூல் எடுக்கிறார்கள்.

அதே தொழில்நுட்பத்தை தமிழக விவசாயிகள் அறிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் 110–வது விதியின் கீழ் இதற்கான பல அறிவிப்புகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டார். அவருடைய சீரிய நடவடிக்கை காரணமாக தோட்டக்கலைத்துறை தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நவீன தொழில்நுட்பம்

சீனா காய்கறி சாகுபடியில் தமிழ்நாட்டை விட உற்பத்தியிலும், உற்பத்தி திறனிலும் நிறைவிலும் மிக அதிகமாக இருக்கிறது. எந்த காலத்திலும் எல்லா பழங்கள், காய்கறிகள் மகசூல் அதிகமாக கிடைக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வருகிறார்கள்.

அவர்கள் என்ன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, எந்த முறையில் சாகுபடி செய்கிறார்கள்? என்பதை அறிந்து வர தமிழகம் முழுவதும் இருந்து காய்கறி விவசாயத்தில் தீவிரமாக ஈடுபடுபவர்களையும், அதிலும் குறிப்பாக படித்துவிட்டு இந்த விவசாயத்தில் ஈடுபடுபவர்களாக 20 விவசாயிகளை தேர்ந்தெடுத்து அரசு செலவில் சீனாவுக்கு அனுப்ப முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

<u>உயரிய சொட்டுநீர் பாசன முறை</u>

தண்ணீர் வளம் இல்லாத நாடு இஸ்ரேல். இங்கு கடல்நீரை குடிநீராக்கி தான் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்கிறார்கள். ஒரு லிட்டர் தண்ணீர் இந்திய மதிப்பின்படி ரூ.252 என்றாலும், தண்ணீரை சொட்டுநீர் பாசன முறை மூலம் சிக்கனமாக பயன்படுத்தி நம்மை விட மிக உயரிய தொழில்நுட்பத்தின் மூலம் சாகுபடி முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஒரு புறம் பாசன நீர் சிக்கனம், மற்றொருபுறம் விளைபொருள் தரம் உயர்வு, உயரிய அறிவியல் தொழில்நுட்பத்தை விவசாயத்தில் பின்பற்றுதல் என்று மிக உயரிய நிலையில் விவசாயத்தில் உலகிற்கே 'ரோல் மாடலாக' திகழ்கிறார்கள்.

ஒரு ஏக்கர் நிலத்தில் தமிழ்நாட்டில் 40 மாமரங்கள் சாகுபடி செய்யப்படுகிறது என்றால், இஸ்ரேலில் 647 மாமரங்கள் வளர்கின்றன. இதுபோல நாம் 6 ஏக்கர் நிலத்துக்கு பயன்படுத்தும் தண்ணீரை இஸ்ரேலில் 10 ஏக்கர் நிலத்துக்கு சொட்டுநீர் பாசனமாக பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய தொழில்நுட்பத்தை அறிந்து வருவதற்காக மேலும் 20 விவசாயிகளை அரசு செலவில் இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்ப முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

<u>மாதிரி பண்ணை</u>

இந்த 40 விவசாயிகளும் எல்லா மாவட்டங்களை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். விவசாயத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும். படித்தவர்களாக இருந்தால் மிகவும் நல்லது. இவர்கள் சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் தொழில்நுட்பத்தை அறிந்து கொண்டு, தங்கள் விளைநிலங்களில் பயன்படுத்த வேண்டும். தங்களுடைய நிலத்தை மாதிரி பண்ணையாக அமைத்து மற்றவர்களை தெரிந்து கொள்ள செய்ய வேண்டும்,

தாங்கள் கற்ற தொழில்நுட்பத்தை மற்ற விவசாயிகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது தான் தமிழக அரசின் நோக்கமாக உள்ளது.

ஜனவரி மாதம்...

தேர்வு பணிகள் முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்பேரில் மிக தீவிரமாக நடந்து வருகிறது. இதில், பாரபட்சம் இருக்கக்கூடாது. தகுதியானவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தேர்வுகள் நடக்கிறது. அநேகமாக ஜனவரி மாதம் இந்த 40 விவசாயிகளையும் சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா அனுப்பி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது அரியலூர் மாவட்டத்தில் சூறை காற்றுடன் பலத்த மழை



அரியலூர் மாவட்டத்தில் சூறை காற்றுடன் பலத்த மழை பெய்ததையொட்டி பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

பள்ளிகளுக்கு விடுமுறை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கியது. இதனால் மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

அரியலூர் மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அரியலூர் மாவட்டத்தில் சூறைக்காற்றுடன் பரவலாக மழை பெய்தது. இந்த மழை நேற்று அதிகாலை வரை நீடித்தது. இதற்கிடையே வளிமண்டல காற்றழுத்தம் தீவிரமடைவதன் காரணமாக அரியலூர் மாவட்டத்தில் கனமழை பெய்ய வாய்ப்பிருக்கிறது. இந்த மழையால் மாணவர்கள் பள்ளிக்கு வருவதில் சிக்கல் ஏற்படக்கூடும் என்பதற்காகவும், மேலும் அசம்பாவித சம்பவங்கள் ஏதும் ஏற்படாத வகையிலும், முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் அரியலூர் மாவட்ட பள்ளிகள் அனைத்திற்கும் விடுமுறை அளித்து உத்தரவு பிறப்பித்தார்.

அறிவிப்பு பலகையில்தகவல்

அதனை தொடர்ந்து அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேற்று விடுமுறை விடப்பட்டது. மேலும் இது குறித்து தகவல் அந்தந்த பள்ளியின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டது. ஒரு சில மாணவர்கள் தகவல் தெரியாமல் பள்ளிக்கு வந்தனர். அவர்கள் அறிவிப்பு பலகையை பார்த்து விட்டு விடுமுறை என்பதை உறுதிபடுத்தி கொண்டு மீண்டும் வீட்டிற்கு திரும்பி சென்றனர். மேலும் ஒருசில மாணவ, மாணவிகள் தங்களது பள்ளி ஆசிரியரின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டிருப்பதை தெரிந்து கொண்டனர். இந்த திடீர் விடுமுறையால் அரியலூர் மாவட்ட பள்ளி மாணவர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## நெகமத்தில் ஒரே நாளில் 155 மி.மீ மழை பெய்தது ஆறுகளில் வெள்ளப்பெருக்கு; தோட்டங்களில் மழைநீர் சூழ்ந்தது



பொள்ளாச்சி,

கொட்டி தீர்த்த கனமழையால் நெகமத்தில் ஒரே நாளில் 155 மில்லி மீட்டர் பதிவாகி உள்ளது. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. தோட்டங்களில் மழைநீர் சூழ்ந்தது.

மழை வெள்ளம்

வடக்கு கிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இதன் காரணமாக பொள்ளாச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் நள்ளிரவு 2 மணிக்கு பெய்ய தொடங்கிய மழை, நேற்று காலை 6 மணி வரை கொட்டி தீர்த்தது.

பலத்த மழையால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. டி.கோட்டாம்பட்டியில் இருந்து கள்ளிபாளையம் செல்லும் சாலையில் மழைநீர் குளம் தேங்கி நின்றது. இதனால் அந்த பகுதி பொதுமக்கள் கடும் அவதிப்பட்டனர். இதையடுத்து நகராட்சி பணியாளர்கள் மழைநீர் நீரை வடிகட்டும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரே நாளில் 155 மி.மீ மழை

பல்லடம் ரோட்டை மழை வெள்ளம் சூழ்ந்ததால், வாகனங்கள் சாலையில் ஊர்ந்து சென்றன. கண்ணப்ப நகர், கோட்டூர் ரோடு ஆகிய பகுதிகளில் வீடுகளுக்கு மழைநீர் புகுந்தது. அரசு போக்குவரத்து கழக பணிமனையின் சுற்றுச்சுவரையொட்டி கழிவு நீரும், மழைநீரும் தேங்கி நின்றது. இதனால்

பணிமனையில் சுற்றுச்சுவர் இடிந்து அருகில் உள்ள வீட்டின் உள்ளே விழுந்தது.

பலத்த மழையின் காரணமாக நேற்று காலை 8 மணி நிலரப்படி நெகமத்தில் அதிகபட்சமாக 155 மி.மீ மழையும், பொள்ளாச்சியில் 124 மி.மீ மழையும் பதிவானது. நெகமத்தில் விடிய, விடிய பெய்த மழை காரணமாக சாலைகளில் வெள்ளம் பெருக்குகெடுத்து ஓடியது. தாழ்£வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

தோட்டங்களில் மழைநீர் புகுந்தது

ஆனைமலை மற்றும் சுற்று வட்டார பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் சாலைகளில் மழை வெள்ளம் ஆறாக ஓடியது. சாக்கடை கால்வாயில் அடைப்பு ஏற்பட்டதால் மழைநீருடன் கழிவுநீரும் கலந்து சாலையில் தேங்கியது. தொடர் மழையால் ஆழியாறு மற்றும் உப்பாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

ஊப்பாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஆனைமலை மாசாணியம்மன் கோவில் அருகே உள்ள தரைபாலம் தண்ணீரில் மூழ்கியது. பின்னர் நேற்று காலையில் தண்ணீர் வடிய தொடங்கியது. ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அருகே உள்ள வயல் வெளிகள் மற்றும் தென்னந்தோப்புகளில்களில் வெள்ளம் புகுந்தது. விவசாயிகள் தண்ணீரை வடிய செய்யும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். வால்பாறையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று மதியம் விடிய, விடிய மழை கொட்டி தீர்த்தது.

<u>வெள்ளப்பெருக்கு</u>

கிணத்துக்கடவு பகுதியில் பெய்த பலத்த மழையால் சொக்கனூர் ஆற்றில் தடுப்பணை நிறைந்து மறுகால் பாய்கிறது. தாமரைகுளம் மலசார்பதியில் இருந்து வேலாயுதபாளையம் செல்லும் வழியில் உள்ள தரைப்பாலம் தெரியாதபடி மழைநீர் சென்றது. இதனால் அருகே உள்ள குடியிருப்புக்குள் மழை நீர் செல்லும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் விரைந்து சென்று மழைநீர் குடியிருப்புக்குள் செல்லாதபடி செய்தனர். அந்த பகுதியில் தாசில்தார் சித்ரா, ஒன்றிய குழு தலைவர் ராஜமாணிக்கம், ஆணையாளர் உதயகுமார், வருவாய் ஆய்வாளர் சிவக்குமார், கிராம நிர்வாக அதிகாரி கமருன் நிஷா ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் விடிய விடிய பலத்த மழை 200-க்கும் மேற்பட்ட வீடுகளில் வெள்ளம் புகுந்தது 2 இடங்களில் தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி தண்ணீர் சென்றது



ஈரோடு

ஈரோடு மாவட்டத்தில் விடிய, விடிய பெய்த பலத்த மழையால் 200-க்கும் மேற்பட்ட வீடுகளில் மழைவெள்ளம் புகுந்தது. 2 இடங்களில் தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி தண்ணீர் சென்றது.

அந்தியூர்

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரகாலமாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் அந்தியூர் அருகே உள்ள கிழக்குமலைப்பகுதியான ஈரெட்டி, ஒந்தனை, தேவர்மலை, மடம் மற்றும் எண்ணமங்கலம், கோவிலூர் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று காலை 5 மணி வரை இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் ரோடுகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

செலம்பூர் அம்மன் கோவில் அருகே தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி வெள்ளம் சென்றது. இதனால் ரோட்டில் அரிப்பு ஏற்பட்டது. இதனால் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பெருந்துறை

இதேபோல் பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. நேற்று காலை 6 மணி வரை இடைவிடாது பலத்த மழை பெய்தது. இந்த மழையால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. குள்ளம்பாளையம் அருகே உள்ள மேட்டுப்பாளையம் ஏரி ஒரேநாள் இரவு முழுவதும் பெய்த மழையால் நிரம்பி வழிந்தது.

இதேபோல் சீனாபுரம் அருகே ஆயிக்கவுண்டன்பாளையத்தில் உள்ள ஏரியும் நிரம்பி வருகிறது. கள்ளிப்பாளையம் ஏரியின் கரை மழை வெள்ளம் காரணமாக உடைந்தது. ஏரியில் இருந்து பெருக்கெடுத்து ஓடும் மழை வெள்ளம் அருகில் உள்ள விவசாய கிணறுகளில் கலந்தது. இதனால் அந்த பகுதியில் உள்ள கிணறுகள் நிரம்பி வருகிறது.

சீரணம்பாளையம் ஏரி

சீரணம்பாளையத்தில் வீராச்சிபாளையம் செல்லும் வழியில் உள்ள பெரிய ஏரியானது 18 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பி வழிகிறது. ஏரியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை வழியாக வெளியேறும் நீர் அருவிபோல் கொட்டுகிறது. பெருந்துறை பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

சத்தியமங்கலம்

சத்தியமங்கலம் ரங்கசமுத்திரம் பகுதியில் சத்தி நகராட்சி சார்பில் தொடக்கப்பள்ளிக்கூடம் மற்றும் உயர்நிலைப்பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது. தற்போது இந்த பள்ளிக்கூடங்களில் கழிப்பறைகள் மற்றும் வகுப்பறைகள் பழுதடைந்து உள்ளது. அதனால் பழுதுநீக்க பல லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. சத்தியமங்கலம் பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

அதனால் அந்த பள்ளிக்கூடங்கள் கட்டுமான பணிகள் பாதிக்கப்பட்டது. மேலும் மழையால் ஒருசில கட்டிடங்கள் சேதம் அடைந்தது. 3 வகுப்பறைகளுக்கு மழைநீர் புகுந்தது. இதனால் மாணவர்கள் கடும் அவதியடைந்தனர்.

சிவகிரி

சிவகிரி, வேட்டுவபாளையம், கந்தசாமிபாளையம், அம்மன்கோவில் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் நேற்று காலை வரை பலத்த மழை பெய்தது. இந்த மழையால் அந்த பகுதியில் உள்ள ஏரி, குளம் நிரம்பி வழிகிறது. மேலும் ரோடுகளில் பெருக்கெடுத்து ஓடிய மழைவெள்ளம் மஞ்சள், கரும்பு தோட்டத்தில் புகுந்தது. இதனால் மஞ்சள், கரும்புகள் நீரில் மூழ்கின.

அம்மாபேட்டை

அம்மாபேட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று காலை வரை மிதமான மழை பெய்தது. இந்த மழையால் பூனாச்சி, சிங்கம்பேட்டை, சின்னம்பேட்டை, குறிச்சி ஆகிய தாழ்வான பகுதிகளில் சுமார் 50 வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து பொக்லைன் இயந்திரம் மூலம் தண்ணீரை அகற்றும் பணி நடைபெற்றது. மேலும் அந்த பகுதியில் உள்ள நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின. சிங்கம்பேட்டையில் மோகன் என்பவரது பாக்கு தோப்புக்குள் மழை நீர் புகுந்தது. இதுதவிர பெருக்கெடுத்து ஓடிய மழைநீர் அம்மாபேட்டை-அந்தியூர் ரோட்டில் உள்ள 2 குறுகிய பாலத்தை மூழ்கடித்தபடி சென்றது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கவுந்தப்பாடி

கவுந்தப்பாடி, ஈஞ்சரம், குறிச்சான்வலசு பகுதி, செந்தாம்பாளையம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு மழை தூறலாக பெய்ய தொடங்கியது. இந்த மழை நேற்று காலை 6 மணி வரை விட்டுவிட்டு பெய்தது.

இதனால் சலங்கபாளையம் ஓடைப்பள்ளத்தில் இருந்து வெளியேறிய மழைநீர் சலங்கபாளையம் அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தை சூழ்ந்தது. மேலும் ஈஞ்சரம் தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி மழைவெள்ளம் சென்றது. இதனால் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சாலை மறியல்

இதைத்தொடர்ந்து கே.ராமநாதபுரம் பகுதி பொதுமக்கள் சுமார் 100 பேர் நேற்று காலை 8.15 மணிக்கு கவுந்தப்பாடி-காஞ்சிக்கோவில் ரோட்டில் ஒன்று கூடி சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும் சலங்கபாளையம் பேரூராட்சி தலைவர் இந்திராணி, செயல்அலுவலர் திலக்ராஜ், போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகம் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது பொதுமக்கள் கூறும்போது, ‘தரைப்பாலம் இருப்பதால் மழை பெய்யும்போது பாலத்தை மூழ்கடித்தபடி மழை வெள்ளம் செல்கிறது. இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே உயர்மட்ட பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்‘ என்றனர். அதற்கு அதிகாரிகள், ‘நடவடிக்கை எடுக்கப்படும்‘ என்று உறுதி அளித்தனர். இதையடுத்து பொதுமக்கள் சாலைமறியலை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

அறச்சலூர்

அறச்சலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் நேற்று காலை 7 மணி வரை இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் குமாரபாளையம் காலனியில் 20 குடிசை வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. இதுபற்றிய தகவல் கிடைத்ததும் பேரூராட்சி தலைவர் விஜயலட்சுமி கோவிந்தசாமி அங்கு விரைந்து சென்று வெள்ளம் சூழ்ந்த பகுதியை பார்வையிட்டு, மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.

பவானி

பவானி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று காலை பலத்த மழை பெய்தது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பவானி ஆற்றில் இருந்து காலிங்கராயன் தடுப்பணைக்கு வந்த தண்ணீர் மீண்டும் பவானி ஆற்றுக்கு திருப்பி விடப்பட்டு காவிரி ஆற்றில் சென்று கலந்தது. தாழ்வான பகுதிகளான தொட்டிபாளையம், ஊராட்சிக்கோட்டை, திருவள்ளுவர் நகரில் உள்ள சுமார் 30 வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. ராணாநகர், நடராஜா நகர், ஜீவாநகர், மேட்டூர் மெயின் ரோடு பகுதியில் உள்ள

சுமார் 15 வீடுகளையும், தொட்டிபாளையம் பகுதியில் 100 வீடுகளையும் மழைவெள்ளம் சூழ்ந்தது. இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. காடையம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியை மழைவெள்ளம் சூழ்ந்தது. இதனால் அந்த பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது. மேலும் இந்த மழையால் மண் அரிப்பு ஏற்பட்டு சுமார் 1000 அடி உயரத்தில் உள்ள ஊராட்சிக்கோட்டை மலைப்பகுதியில் இருந்து பாறைகள் உருண்டன. இதில் வேதகிரிபுரத்தில் உள்ள வரதராஜ் என்பவரின் வீட்டின் சமையல் அறை பகுதி இடிந்து விழுந்தது. மேலும் அவரது மாட்டு தொழுவத்தின் மீது பாறை விழுந்ததில் பக்கவாட்டு சுவர் இடிந்தது. இதில் மாட்டு தொழுவத்தில் கட்டப்பட்டு இருந்த எருமை மாடு லேசான காயம் அடைந்தது. அதேபோல் கணபதிராஜா, ஆனந்தராஜா ஆகியோரது வீட்டின் மீதும் பாறைகள் விழுந்தன. இதில் கணபதிராஜா வீட்டின் குளியலறை இடிந்து விழுந்தது. ஆனந்தகுமார் வீட்டின் முன்பக்க சுவரில் லேசான விரிசல் ஏற்பட்டது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்தவித உயிர்சேதமும் ஏற்படவில்லை. ஜம்பை முத்துக்கவுண்டனூரில் உள்ள ராமன் (50) என்பவரது வீடு மழையால் இடிந்து விழுந்தது. அப்போது வீட்டில் யாரும் இல்லாததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. காடையாம்பட்டி, வரதநல்லூர் ஏரி நிரம்பியது. இதில் வரதநல்லூர் ஏரியின் கரை உடைப்பு ஏற்படும் நிலை நிலவுவதால் மண் கொட்டி கரை பலப்படுத்தப்பட்டது. நத்தக்காட்டூர் ஏரி நிரம்பி அதில் உள்ள மழைநீர் வெளியேறி அருகில் உள்ள மக்காச்சோள தோட்டத்துக்குள் புகுந்தது. இதில் பயிர்கள் மூழ்கி சேதம் அடைந்தன.

மொடக்குறிச்சி

மொடக்குறிச்சி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணி முதல் நேற்று காலை 7 மணி வரை இடைவிடாமல் மழை பெய்தது. இதனால் அந்த பகுதியில் உள்ள கிணறுகள், குட்டைகள் நிரம்பின. இந்த மழையால் மொடக்குறிச்சி ஆவாரங்காட்டுவலசு பகுதியில் சாக்கடை நீருடன் மழை நீர் கலந்து ஓடியது.இதனால் அந்த பகுதியில் உள்ள சுமார் 50 வீடுகளை சூழ்ந்தது. லக்காபுரம் மெயின்வீதியில் மழை வெள்ளம் சூழ்ந்ததால் பொதுமக்கள் சிரமப்பட்டனர். மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்துக்குள்ளும், நூலகத்துக்குள்ளும் தண்ணீர் புகுந்தது. மேலும் அருகே

உள்ள அரிசி ஆலைக்குள் தண்ணீர் புகுந்ததில் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த 100 நெல் மூட்டைகள் நனைந்து சேதமடைந்தன. ஊஞ்சப்பாளையத்தில் உள்ள ஒடையில் பெருக்கெடுத்து ஓடிய மழைவெள்ளம் அருகில் உள்ள மஞ்சள் தோட்டத்துக்கு புகுந்தது. இதில் மஞ்சள் பயிர் தண்ணீரில் மூழ்கியது.

துய்யம்பூந்துறை அருகே காகந்தான்வலசுவில் உள்ள பொதுக்குளத்தில் உடைப்பு ஏற்பட்டு அருகில் உள்ள மஞ்சள் தோட்டத்துக்குள் தண்ணீர் புகுந்தது. எழுமாத்தூர் அருகே உள்ள அனுமன் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அய்யகவுண்டன்பாளையம் அருகே முனியப்பன்கோவிலை சூழ்ந்தது. ஈரோடு-கரூர் மெயின்ரோட்டில் சாவடிபாளையம் அருகே உள்ள நுழைவுபாலத்தை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

200 வீடுகளில் வெள்ளம் புகுந்தது

அவல்பூந்துறையில் உள்ள குளத்தில் ரூ.1 கோடி 75 லட்சம் செலவில் பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது. அங்கு குளத்தின் கரைகள் புதிதாக கட்டப்பட்டு உள்ளது. நேற்று முன்தினம் அந்த பகுதியில் பெய்த பலத்த மழையால் குளம் நிரம்பி வழிந்தது. இந்தநிலையில் புதிதாக கட்டப்பட்ட குளத்தின் கரை இடிந்து விழும் நிலையில் இருப்பதாக தகவல் பரவியது. அதைத்தொடர்ந்து ஈரோடு மாவட்ட வருவாய் அதிகாரி ஆர்.சதீஸ், ஆர்.டி.ஓ. நர்மதாதேவி, தாசில்தார் மேனகா ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குளத்தின் கரையை பார்வையிட்டனர். இதையடுத்து கரைகளை பலப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். அதன்பின்னர் கரைகள் உடையாமல் இருக்க மணல்மூட்டைகள் போடப்பட்டு, பணிகள் தொடங்கி நடந்து வருகிறது. இந்த ஆய்வின்போது அ.தி.மு.க. மாநகர் மாவட்ட செயலாளர் சிவசுப்பிரமணி, ஊராட்சி ஒன்றிக்குழு துணைத்தலைவர் கணபதி, குளூர் கூட்டுறவு சங்க துணைத்தலைவர் தங்கராஜ், ஆவின் இயக்குனர் அசோக், வட்டார வளர்ச்சி அதிகாரி முருகேசன், ஒன்றிய பொறியாளர்கள் உமாசங்கர், ரமேஷ்குமார் உள்பட பலர் உடன் இருந்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் விடிய, விடிய பெய்த பலத்த மழையால் 200-க்கும் மேற்பட்ட வீடுகளில் மழைவெள்ளம் புகுந்தது. 2 இடங்களில் தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி தண்ணீர் சென்றது.

## மழைநீர் தேங்காத வகையில் வீட்டில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்ற வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்



ஈரோடு,

தமிழ்நாட்டில் வடக்கிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு கனமழை பெய்தது. எனவே மழைக்காலத்தில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறிஇருப்பதாவது:–

டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க பொதுமக்கள் தங்கள் வீடுகளில் தண்ணீர் தேங்காமல் கவனித்து கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் பொருட்களான மண்பானைகள், குளிர்சாதன பெட்டி, தேங்காய் தொட்டி, உரல், சிமெண்டு தொட்டி, டிரம்கள் ஆகியவற்றில் காற்று புகாதவாறு மூடி வைக்க வேண்டும். கீழ்நிலை, மேல்நிலை தண்ணீர் தொட்டிகளில் ஏ.டி.எஸ். கொசு உற்பத்தியாகாமல் இருக்க வாரம் ஒரு முறை சுத்தம் செய்ய வேண்டும். வீட்டை சுற்றி உள்ள நீர்தேங்கும் பொருட்களில் டெங்கு கொசுப்புழு

உற்பத்தியாகாமல் இருக்க தேவையற்ற பொருட்களை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## தொடர் மழை எதிரொலி: நீலகிரி அணைகளின் நீர்மட்டம் உயருகிறது



ஊட்டி,

தொடர் மழை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

வடகிழக்கு பருவமழை

நீலகிரி மாவட்டத்தில் ஜூன் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை தென்மேற்கு பருவமழை பெய்யும். ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்த நிலையில் கடந்த அக்டோபர் மாதம் முதல் நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மேலும் மழை காரணமாக அணைகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

நீர்மட்டம் உயருகிறது

தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு பெய்யாததால் பெரும்பாலான அணைகள் தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டன. ஆனால் தற்போது

பெய்து வரும் வடகிழக்கு பருவமழை காரணமாக அணைகளுக்கு வரும் தண்ணீர் அளவு அதிகரித்து உள்ளதால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

ஊட்டி நகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் பார்சன்ஸ்வேலி அணையில் 37 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. 2–வது பெரிய அணையாக உள்ள டைகர் ஹில் அணையில் 30 அடி உயரத்திற்கு தண்ணீர் காணப்படுகிறது.

<u>குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை</u>

அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ஊட்டி நகராட்சி பகுதி பொதுமக்களுக்கு அடுத்த சில மாதங்களுக்கு தேவையான தண்ணீர் இருப்பு உள்ளதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை என்று நகராட்சி அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

ஊட்டி நகருக்கு குடிநீர் வழங்கும் அணையில் தற்போது உள்ள நீர்மட்டம் அளவு விவரம் வருமாறு:–

பார்சன்ஸ் வேலி –37.31 அடி

மார்லிமந்து –25 அடி

டைகர் ஹில் –30 அடி

கோரிசோலா– 3.30 அடி

தொட்டபெட்டா அப்பர்– 4 அடி

மேலும் தற்போது பெய்து வரும் மழை காரணமாக பொதுமக்களுக்கு சளி, இருமல் காய்ச்சல் போன்றவை பரவி வருகிறது. இதனால் பொதுமக்கள் குடிநீரை நன்கு காய்ச்சி, அதன் பின்னர் குடிக்க வேண்டும் என்று நகராட்சி அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கெலவரப்பள்ளி அணையில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு தென்பெண்ணை ஆற்று கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை




தொடர் மழை எதிரொலியாக ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதனால் தென்பெண்ணை ஆற்று கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கெலவரப்பள்ளி அணை

கர்நாடக மாநிலத்தில் தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 44.2 அடியாகும்.

அணையின் நேற்றைய நீர்மட்டம் 43.3 அடியாகும். அணைக்கு வினாடிக்கு 1,900 கன அடி தண்ணீர் வருகிறது. அதே போல அணையில் இருந்து தண்ணீர் திறப்பு 1,750 கன அடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. இந்த தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் ஆர்ப்பரித்து ஓடுகிறது.

வெள்ள அபாய எச்சரிக்கை

இதனால் தென்பெண்ணை ஆற்றங்கரையோர பகுதிகளான தொரப்பள்ளி, பாத்தகோட்டா, உலகம், காமன்தொட்டி உள்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு வருவாய்த்துறை சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும், தென்பெண்ணை ஆற்று தரைப்பாலங்களை பொதுமக்கள் கடக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது.

## ஆண்டிப்பட்டி மார்க்கெட்டில் பூக்கள் வரத்து குறைந்ததால் விலை உயர்வு ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.500–க்கு விற்பனை



ஆண்டிப்பட்டி,

ஆண்டிப்பட்டி மார்க்கெட்டில் பூக்களின் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்தது. இதில் மல்லிகை பூ ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனையானது.

<u>பூக்களின் வரத்து குறைந்தது</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள கதிநரசிங்கபுரம், கன்னியப்பப்பிள்ளைபட்டி, பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், ஏத்தகோவில், சுந்தர்ராஜபுரம் ஆகிய பகுதியில் மல்லிகை, செவ்வந்தி உள்ளிட்ட பூக்கள் சாகுபடி அதிகம் நடைபெறுகிறது.

இங்கு விளையும் பூக்கள் ஆண்டிப்பட்டி பூ மார்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டுக்கான வடகிழக்கு பருவமழை தற்போது பெய்து வரும் நிலையில், விவசாய பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஆண்டிப்பட்டி தாலுகாவில் பூக்களின் விளைச்சல் திடீரென குறைந்ததால், பூ மார்க்கெட்டிற்கு பூக்களின் வரத்து குறைந்துள்ளது.

இதன் காரணமாக பூக்களின் விலை கடந்த வாரத்தை விட தற்போது அதிகரித்து காணப்படுகிறது.

<u>மல்லிகை பூ விலை உயர்வு</u>

குறிப்பாக கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.200–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த மல்லிகைப்பூ வரத்து குறைவால் விலை உயர்ந்து, தற்போது ரூ.500–க்கு விற்றது. இதே போல் அனைத்து பூக்களின் விலையும் நேற்று அதிகரித்தே காணப்பட்டது. அதன்படி கடந்த வாரம் கிலோ ரூ.300–க்கு விற்ற கனகாம்பரம் ரூ.500–க்கும், கிலோ ரூ.150–க்கு விற்ற பிச்சிப்பூ ரூ.250–க்கும், ரூ.150–க்கு விற்ற வெள்ளை ஜாதிபூ ரூ.250–க்கும் மற்றும் கிலோ ரூ.25–க்கு விற்ற துளசி ரூ.125–க்கும் விற்பனை செய்யப்பட்டது. சம்மங்கிப்பூ கிலோ ரூ.20, ரோஜாப்பூ ரூ.30, கோழிக்கொண்டை ரூ.30, செண்டுப்பூ ரூ.20–க்கும் விற்பனையானது.

இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்ட போது, 'மல்லிகைப்பூ விலை உயர்ந்துள்ளதால், இதனால் கட்டி விற்கப்படும் மல்லிகை பூவின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது. மல்லிக்கைப்பூ வரத்து கடந்த சில நாட்களாக குறைந்து கொண்டே வருவதால், தீபாவளி பண்டிக்கையின் போது, மல்லிகை பூவின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றனர்.